அருள் ஒளி

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

140

தெல்லிப்பழை. இலங்கை.

பங்குனி - சித்திரை மாதம் - 2019

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயம்
பெருந்திருவிழா 2019





அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்

பங்குனி – சித்திரை மாத மலர்
2019

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை

e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

சைவ ஆசிரிய கலாசாலை மீளவும் திறக்கப்பட வேண்டும்

இலங்கை முழுவதிலும் சைவசமய பாடத்தை சிறப்பாகக் கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர்கள் தற்போது இல்லை. சைவசமய பாடத்தை பயபக்தியோடு மாணவர்களுக்கு கற்பிக்கும் பண்பாடு மிகவும் தேய்ந்து போயுள்ளது. இலங்கை முழுவதிலும் சைவத்தமிழ் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் பெருமளவில் கடமையாற்றினர். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சைவாசிரிய கலாசாலை ஊடாக ஆசிரியர்களுக்கு சமயக்கல்வி நன்கு பயிற்றப்பட்டது. கோப்பாயில் இயங்கிய அரசினர் ஆசிரிய கலாசாலையிலும், இராமநாதன் கல்லூரி மற்றும் பரமேஸ்வரா கல்லூரியிலும் இயங்கிய ஆசிரிய கலாசாலைகளிலும் சைவசமய பாடப் பயிற்சி சிறப்பாக வழங்கப்பட்டது. கொழும்புத்துறையில் இயங்கிய ஆசிரிய கலாசாலையில் விசேட பாடமாக சைவ சமயத்தில் பயிற்சி பெற்று ஆசிரியர்கள் வெளியேறினர். பல ஆசிரிய கலாசாலைகள் மூடப்பட்டதன் விளைவு இன்று சரியான முறையில் சைவசமயத்தை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாதநிலை உருவாகிவிட்டது.

இலங்கையில் ஆரிய திராவிடபாஷா அபிவிருத்திச் சங்கம் பல பண்டிதர்களை உருவாக்கியது. மதுரை பண்டிதர் பரீட்சைக்கு பலர் தோற்றி சித்தியடைந்து ஆசிரியப் பணியாற்றினர். இவற்றைவிட சைவ பரிபாலன சபையால் சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர் பயிற்சி நெறிகளும் நடாத்தப்பட்டமையால், இவற்றின் ஊடாக பலர் சிறந்த ஆசிரியர்களாக பணியாற்றினர். பல்கலைக்கழக வளர்ச்சிக்கு ஆசிரிய கலாசாலைகள் பெருந் தாக்கமாக அமைந்திருந்தன. இந்து நாகரிகத்தை ஒரு

பாடமாகக் கற்ற பட்டதாரிகளால் சைவசமயத்தை பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அளவுக்கு கற்பிக்க முடிவதில்லை. பண்டிதர் பட்டப்படிப்பில் இன்று ஆசிரியர்கள் அக்கறை காட்டுவதும் இல்லை. இதனால் சைவசமயத்தை சரியான முறையில் கற்பிப்பதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

பல பாடசாலைகளில் பாடவேளையை நிரப்புவதற்காக வேறு துறைசார்ந்த ஆசிரியர்களுக்கு சமய பாடநேர அட்டவணையை வழங்குவது வழமையாகிவிட்டது. அதனால் சமய உணர்வோடு பாடம் கற்பிக்கும் நிலை மிகவும் குறைந்து வருகிறது. தேசிய கல்வியியற் கல்லூரிகள் நாட்டின் பல பாகங்களிலும் உருவாக்கப்பட்ட போதிலும் சமய பாடத்தில் விசேடமாக பயிற்சி வழங்கும் நெறிமுறை இன்மையால், அங்கிருந்து வெளியேறும் ஆசிரியர்கள் சமய பாடத்தை சீரிய முறையில் கற்பிக்கும் வாய்ப்பு இல்லை. இந்நிலை பற்றி சிந்திப்பார் யாருமில்லை. இந்த நிலை தொடருமானால் சைவசமய பாட அறிவை எமது தலைமுறையினருக்கு கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை தொடரக்கூடும். இதுவிடயம் தொடர்பாக ஆசிரியர்களும், உயரதிகாரிகளும் உரிய அக்கறை செலுத்த வேண்டும்.

சுவாமி சிவானந்தரின் உபதேச மணிகள்

- பகவானிடம் திடநம்பிக்கை கொள். நம்பிக்கைதான் தெய்வத்திருவாயில். நம்பிக்கை ஒன்று மாத்திரம் இருப்பின் எத்தனையோ அற்புதச் செயல்களை ஆற்றமுடியும்.
- காலை எழுந்தவுடன் கடவுளை வணங்கு. இரவு உறங்கு முன்பும் இறைவனை நினைப்பில் வைத்துக் கொள். அவனே கதியென அடைக்கலமடை. கீதையில் சொல்லியிருப்பது போல் யாவற்றையும் அவனடியில் சேர்க்கப் பழகு.
- நித்திரைக்குப் போகுமுன் அத்தினத்தில் செய்த பிழைகளை நினைத்து, ஆத்மவிசாரணை செய். அவற்றிற்காக இறைவனிடம் மன்னிப்புக்கேள். தினக்குறிப்புப் புத்தகமொன்றைக் கொண்டு வாழ்க்கையைச் சீர்திருத்தப் பழகு.
- பகுத்தறியும் புத்தி பரிசுத்தமாக இருக்கட்டும். அகம்பாவ எண்ணங்களை அடியோடு அகற்றிவிடு. யான் யான், எனது எனது என்பதை ஒழித்துவிடு. விடுதலை அடை. சுதந்திரங் கொள். ஆனந்தமாயிரு.
- எப்பொழுதும் முகமலர்ந்திரு. உன்னை வாட்டுங் கவலைகளைச் சிரித்து ஒழி. உள்ளத்தில் எழும் ஆசை, ஆணவ எண்ணங்களைத் துரத்தி ஓட்டி, மனத்தை உயர்த்து.

பாரோர் புகழ வரும் பங்குனி உத்திரம்

எஸ்.ஹரிஹரசர்மா

சைவ சமயத்தில் புண்ணிய நாட்களும் விரததினங்களும் மாதந்தோறும் இடம் பெற்று வருவதை யாவரும் அறிவர். சமூக கலாசார வாழ்க்கையோடு அவை பின்னிப் பிணைந்துள்ளன. மக்கள் லௌகீக வாழ்க்கையில் அமிழ்ந்து போகாமலிருப்பதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. ஆன்மீகத்தை மறவாமல் இருப்பதற்கும் வளர்ந்து வரும் இளைஞர் சமுதாயம் நல்வழியிற் தொடர்ந்து செல்வதற்கும் புண்ணிய நாட்கள் அவர்களைப் புடம் போட்டெடுக்கின்றன. உண்மைக் கருத்துக்களையும் தத்துவக் கருத்துக்களையும் மக்கள் மனதில் பதியச் செய்வதற்குப் புராண இதிகாசங்களைப் போல இதர விரதங்களும் பெரிதும் துணைபுரிகின்றன. கதைகள் வாயிலாகப் பௌராணிகர்கள் இக்கருத்துக்களை மனதில் பதியச் செய்தனர். இவை அனைத்திற்கும் மன ஒருமைப்பாடு மிக இன்றியமையாதது. இவ்வாறு அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் பங்குனி உத்திர விரதமும் ஒன்றாகும்.

பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரம் சேரும் தினத்திலே இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. பங்குனி மாதத்திற் பூமி மீனராசியில் நிற்க சந்திரன் உத்தர நட்சத்திரத்தோடு கன்னியில் நின்று பூரண கலை பெற்றுப் பூரண கிரணத்தை உத்தர நட்சத்திர குணத்தோடு பூமிக்குக் கொடுத்தலால் இத்தினம் விசேடமானதாகும். சிவபெருமானையும் உமாதேவியாரையும் திருமணக் கோலத்தோடு தியானிப்பதால் இது திருமண விரதம் எனவும் அழைக்கப்படும்.

இந்த விரத மகிமையை அளவிட்டு உரைத்தல் சுலபமன்று. இந்த விரதத்தை அனுஷ்டித்தவர்களும் பயனடைந்தவர்களும் எண்ணிலடங்கார். இளைஞர்களுக்கும் கன்னியர்களுக்கும் அருமையான இனிய விரதம் இது. தேவர்கள், முனிவர்கள், நாயன்மார்களுக்கு இறைவன் காட்சியளித்து ஆசீர்வதித்த பெருநாள் பங்குனி உத்திர நன்னாள்.

திருமயிலாப்பூரிலே சிவநேசர் என்ற செட்டியார் தமது அருமைப் புதல்வி பூம்பாவையை திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருமணஞ் செய்வதாக நிச்சயித்திருந்தார். பூம்பாவை பூக் கொய்யச் சென்ற சமயம் பாம்பு தீண்டி இறந்து விட்டாள். தந்தையார் அவள் உடலைத் தகனஞ் செய்து எலும்பையும் சாம்பரையும் சேமித்து வைத்தார். சம்பந்தப் பெருமான் அங்கு சென்ற சமயம் இதை அறிந்து, சாம்பரடங்கிய குடத்தை கபாலீச்சரமென்னும் தலத்திற்கு வரவழைத்தார். கபாலீச்சரருக்குத் திருமண மகோற்சவ நாளின் மகத்துவம் பற்றி ஆளுடையபிள்ளையார் பூம்பாவைப் பதிகத்திலே,

மலிவிழாவீதி மட நல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
பலி விழாப்பாடல் செய் பங்குனி உத்தர நாள்
ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்

என்று பாடினார். பூம்பாவையும் உயிர் பெற்றெழுந்தார்.

மலையத்துவஜனும் அவன் மனைவி காஞ்சனமாலையும் பிள்ளைவரம் வேண்டித் தவம் இயற்றியபோது, யாகத்திலிருந்து தோன்றியவளே மீனாட்சி. பெற்றோர் 'தடாதகை' எனப் பெயரிட்டு அவளை வளர்த்து வந்தனர். தடாதகைப் பிராட்டியார் மூன்று மார்பகங்களுடன் அவதரித்தாள். யாரைப் பார்த்தால் அவளது மூன்றாவது மார்பகம் மறையப் போகிறதோ அவனே அவளுக்கு மணாளனாவான் என்றது ஓர் அசரீரி, எண் திசையும் தன் வசமாக்கிய தடாதகைப் பிராட்டி கைலாசமலை நோக்கிச் சென்றபோது முக்கண்ணன் முன் நாணி நின்றாள். அவளுடைய மூன்றாவது தனம் மறைந்தது. அவளின் குறைதீர்த்த, அழகிற் சிறந்த சுந்தரராக, சொக்க வைக்கும் சொக்கநாதச் சிவபெருமானே தோன்றினார். அதன்பின் பூலோகம் வந்த சுந்தரேஸ்வரர் திருமால் கைபிடித்துக் கொடுக்க மீனாட்சி அம்பாளை பங்குனி உத்தர நாளில் மணந்தார். மீனானது தன் பார்வையால் தன் குஞ்சுகளைக் காத்து வருவதுபோல், தன் மீன் போன்ற கண்களால் அன்னை மீனாட்சி அனைவரையும் காத்து வருகின்றாள். இங்கு அன்னைக்குத்தான் முதல் வழிபாடு.

தட்ஷன் மகளாக அவதரித்த தாக்ஷாயணி தந்தையை அவமரியாதை செய்ததன் காரணமாக பூமியில் மறு அவதாரம் எடுக்க விரும்பினாள். சிவபிரானும் வரம் ஈந்து அருளினார். இந்த தாக்ஷாயணியே மலையரசனான ஹிமவான், மேனை தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தாள். பர்வத குலத்தில் அவதரித்ததால் அவளுக்குப் பார்வதி என்ற நாமம் ஏற்பட்டது. நாரதர் கூற்றுப் பிரகாரம் பார்வதி சிவபிரானை மணக்கக் கடுந்தவம் புரிந்தாள். இறைவன் அவளது மனோவலிமையைச் சோதித்து மகிழ்ந்து "ஜீவராசிகளின் நன்மைக்காகவே நான் பார்வதியைத் திருமணம் செய்ய விரும்புகிறேன். சப்தரிஷிகளே! நீங்கள் ஹிமவானிடம் சென்று பெண் தரும்படி கேளுங்கள்" என்று அவர்களை வேண்டிக் கொண்டார். அவர்களும் அதன் பிரகாரம் சென்று ஒழுங்குகளைச் செய்தார்கள்.

சிவபிரானும் மணமகனுக்கு ஏற்ற வகையில் ஆடை அணிகலன்கள் அணிந்தவராகப் பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களாலும், மகரிஷிகளாலும், பிரமத கணங்களாலும் சூழப்பட்டுவர ஹிமவானின் மாளிகையை அடைந்தார். பார்வதியும் அழகொழுக வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவராக அலங்கரிக்கப் பெற்றிருந்தாள். அவர்களது திருக்கல்யாணச் சடங்கு முழுவதும் நன்கு முறையறிந்த புரோகிதர்களாற் செய்து வைக்கப்பட்டது. உலகிற்குத் தாய் தந்தையரான அவ்விருவரும் உலகின் பாட்டனாராக இருக்கும் பிரம்மதேவரை வணங்கினர்.

"இத்தம் விதிக்ஞேன, புரேஹிதேன பிரயுக்த
பாணிக்கிரஹணோபசாரோ
ப்ரணே மதுஸ்தெள பிதரௌ பிரஜாநாம்
பத்மாசனஸ்தாய பிதாமஹாய"

இவ்வாறு கூறுகிறது காளிதாசன் இயற்றிய குமாரசம்பவம்.

இவர்களுடைய திருக்கல்யாணம் பங்குனி உத்திரத்தன்று நிகழ்ந்ததாக நூல்கள் கூறுகின்றன. பங்குனி உத்திர தினத்தன்று திருவாரூர்த் தியாகேசப் பெருமான் வீதியிற்

பவனி வருவது குறித்துப் புலவர் ஒருவர் சந்தோஷித்துப் பின்வரும் பாடலைப் பாடினார்.

பாரோர் புகழவரும் பங்குனி உத்திரத்தில்
ஆருரர் வீதி அணுகினார் - நேரே
பணச் சர்ப்பந்தரித்துப் பொற்பதத்திற் கிண்கிணிச் சத்தம்
கிணுக்குக் கிண் கிணுக் கொன்னவே

இத் தினத்தின் மகிமையை இப்பாடல் குறிப்பிடுகிறது. இந்த விரதத்தினை உணர்த்துவதற்கு, முன்னர் நிகழ்ந்ததாகக் கூறப்படும் வரலாறும் உண்டு. திரேதாயுகத்தில் ரகு என்று சொல்லப்படுகின்ற மிக உயர்ந்த பண்பும், குணசீலருமான அரசன் ஒருவன் தனது நாட்டை மனுதர்ம சாஸ்திரத்திற் கூறப்பட்டபடி ஆண்டு வந்தார். பசி, பட்டினி, நோய், துன்பம் என்பன காணப்படவில்லை. மக்கள் மனநிறைவோடு வாழ்ந்து வந்தார்கள்.

எனினும் அக்காலத்தில் வாழ்ந்த ராட்ஷஸி ஒருத்தி மக்களுக்குப் பலவகையிலும் துன்பம் இழைத்து வந்தாள். மக்களால் பொறுக்க முடியவில்லை. ரகு மன்னனும் மனம் நொந்து நாரத மகரிஷியிடம் முறையிட நாரதர் பங்குனி உத்திர விரதத்தைப் பிரசைகளோடு சேர்ந்து அனுஷ்டிக்குமாறு கூறினார். இந்த விரதத்தை அனுட்டிப்பதன் மூலம் ராட்ஷஸியைப் பலமிழக்கச் செய்வதோடு மட்டுமன்றி கூடுதலான செல்வமும் சம்பத்தும் அந்த ராஜ்யம் முழுவதற்குமே கிடைக்குமெனக் கூறினார். அவர்களும் அவ்வாறே அனுஷ்டித்து நன்மைகள் பெற்றனர். பங்குனி உத்திர தினத்தன்று தமிழ் நாட்டில் சில ஆலயங்களில் காமதகன உற்சவமும் நடைபெற்று வருவதைக் காணலாம்.

பங்குனி உத்திரம் பூரணையோடு கூடிவரின் மிகவும் சிறப்புடையது. முறைப்படி விரதம் இருந்து பூஜைசெய்து முருகனை வணங்கினால், பிறவிப் பயனை அடையலாம். 48 ஆண்டுகள் பங்குனி உத்தர நட்சத்திர விரதம் இருப்பவர்களுக்கு அடுத்த பிறவி அருட்பிறவியாக அமையுமென நூல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் பிறவியில் உலகத்தவர் வணங்கும் தெய்வீகத் தன்மை அடைவார்கள்.

வருடம் முழுக்க ஒழுக்கக்கேடாக இருந்துவிட்டு பங்குனி உத்திர விரதம் மட்டும் இருப்பவர்களுக்குத் தீய பலன்களே கிடைக்கும். உத்திர நட்சத்திர அதிபதி சூரியன், போலித்தனமாகப் பக்தி வேடமிடுபவர்களைச் சுட்டெரித்து விடுவான் என்கிறது சூரிய புராணம்.

எனவே பார்வதி, பரமேஸ்வரர் திருவுருவங்களைப் பொன்னால் அமைத்து அபிஷேக ஆராதனைகள் புரிந்து சிவபெருமானை உமாதேவியாரோடும் எழுந்தருளச் செய்து பூசை அர்ச்சனை கிரியைகளை விதிப்படி செய்து வாழ்வாங்கு வாழ்ந்து இகபர சுகம் பெறுவோமாக.

பன்றித்தலைச்சி

மட்டுவில் ஆ.நடராசா

பிரபலமான தலங்களில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்து, அருளாட்சி புரியும் தெய்வத்தின் பெயரால் அக்கோயிலின் சூழல் அல்லது கிராமம் அழைக்கப்படுவது மரபு. கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம் முதலிய இடங்களின் பெயர்கள், அவ்வவ்விடங்களில் எழுந்தருளியிருந்து அருள்புரியும் சிவபெருமானின் பெயரோடு தொடர்புடையனவாய் இருக்கின்றன. அது போல மட்டுவிலில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கண்ணகி அம்மையின் பெயராக மாத்திரமின்றி, இடத்தின் பெயராகவும் பன்றித்தலைச்சி என்னுஞ் சொல் உபயோகிக்கப்படுகின்றது.

கண்ணகி அம்மையின் ஆலயத்துக்குத் தென்கிழக்குத் திசையில் உள்ளதொரு பெரிய வளவு - கோயிலுக்குச் சொந்தமில்லாத வளவு - இன்றும் பன்றித்தலைச்சி என அழைக்கப்படுகின்றது.

மாதனைத் தமிழிசைச் சங்கத்தின் வெளியீடான சிலம்பொலியில் இடம்பெறும் ஒரு பாடலில்,

"துவளிபா ணாவெட்டி அங்கணா மக்கடவை
நச்சுற்ற பன்றித் தலைச்சியில்,
விந்தைசெறி அத்துளுவில் மந்திகையில் நிற்றூவில்
மிக்கவா ழியவளையிலும்,
மேவு திரியாயிலும் கல்லிருப் பின்னரிய
மிக்கவற் றாப்பளையிலும்
வந்துவந் தேயிருந் தங்கு நிதமெனது
மனதினிற் குடிபுகுந்து
வற்றாத கிருபைதந் தேதுணைசெய் மாதனையில்
... மருவுகண் ணகையம்மனே"

எனக் கூறப்படுகின்றது. இது பன்றித் தலைச்சி என்பது இடப்பெயராக வழங்குவதற்கு மேலுமொரு உதாரணம். வடக்கு மாகாணத்தில் கண்ணகி கோயில் கொண்டிருக்கும் சில இடங்களைக் குறிப்பிடும் இப்பாடல், மாதனைக் கண்ணகை அம்மை மீது பாடப்பட்ட காலத்துக்கு முன்பே, மட்டுவிலில் கண்ணகி கோயில் கொண்டிருக்கும் இடம் பன்றித்தலைச்சி என அழைக்கப்பட்டதற்குரிய சான்றாக விளங்குகிறது.

அபிராமியந்தாதி, இராசராசேஸ்வரி அட்டகம் முதலிய நூல்களில் தேவியின் திருநாமங்களைக் கூறும்போது, வாராஹி, வராஹி முதலிய பெயர்களும் கூறப்படுவதை எடுத்துக்காட்டி, அச் சொற்களைப் பன்றித்தலைச்சி எனத் தமிழாக்கம் செய்து பன்றித் தலைச்சியில் கோயில் கொண்டிருப்பது பன்றித் தலையையுடைய தெய்வமெனக் கூறுவோரும் உண்டு.

இச்சந்தர்ப்பபத்தில் பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மை மீது பாடப்பட்ட மூன்று நூல்களைக் குறிப்பிடுவது அவசியமானதாகும். அவை :

1. பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை (இவர் பிற்காலத்தில் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி முதலிய பட்டங்களைப் பெற்றவர்) அவர்கள் 1926ஆம் ஆண்டு பாடிய மட்டுவில் கண்ணகி அம்மை தோத்திரம்.

2. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஊஞ்சல், எச்சரீக்கை, பராக்கு, மேற்படி கண்ணகை சரித்திரச் சுருக்கம். இந்நூல் ஸ்ரீ ராமநாத சமஸ்தானம் வித்துவான் சாவகச்சேரி ஸ்ரீமத் ச. பொன்னம்பலபிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது.

3. கோவலன் கதை. இந்நாட்டார் பாடல் யாரால் எப்போது பாடப்பட்ட தென்பதைக் கூற முடியவில்லை. முன்னாளில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மை ஆலயத்தில் பங்குனித் திங்கட்கிழமைகளில் பறையடிப்பவர்களால் இப்பாடல் பாடப்பட்டு வந்தது. இப்போது அது பாடப்படுவதில்லை. கோவலன் கதை ஏடு எங்கோ மறைந்துவிட்டது.

இந்நூல்களில் எந்த நூலும் பன்றித் தலைச்சியை வராஹி எனக் கூறவில்லை, மாட்டுத் தலையைப் பன்றித்தலையாக மாற்றிய அருட்செயலை மாத்திரமே கூறுகின்றன.

ஆலய ஆவணங்கள் எதிலும் வராஹி என்னும் பெயர் இடம்பெறவில்லை, கண்ணகை என்னும் பெயரே இடம்பெறுகிறது. அதனால் இங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வம் மாட்டுத் தலையைப் பன்றித் தலையாக்கிய தெய்வம் எனக் கூறப்படுகின்றது.

கண்ணகி மாட்டுத் தலையைப் பன்றித் தலையாக்கிய கதை செவி வழியாக வழங்கி வருகிறது. அதனால் போலும் மாடு கொலை செய்யப்பட்ட சம்பவம் இருவேறு விதமாகக் கூறப்படுகின்றது.

பறங்கியர் காலத்திற் புலையர்கள் ஒரு கமக்காரனுடைய மாட்டுப்பட்டியுட் புகுந்து, அங்கு நின்ற மாடுகளிற் கொழுப்பான மாட்டை அவிழ்த்துக் கொண்டு வந்து, கொலை செய்து, இறைச்சியை எடுத்த பின், மாட்டுத் தலையைப் புதைத்தார்கள் என்று கூறுகிறார் வித்துவான் ச.பொன்னம்பலபிள்ளை.இனி இச்சம்பவம் பற்றிப் பரவலாக வழங்கி வரும் கதையை நோக்குவோம்.

கண்ணகியம்மை ஆலயத்திற் பறையடிக்கும் பக்தன் ஒருவன் தனது குலத்தொழிலான புலைத் தொழிலையும் செய்துவந்தான். அன்றொருநாள் அவனெறிந்த கூரிய ஆயுதம் இலக்குத் தவறியோ, திருவருட் செயலாகவோ நாம் அறியோம், பசுவொன்றின் மேற்பட்டது. பசு துடித்துப் பதைத்து இறந்தது. அதைக் கண்டு வருந்திய பக்தன், தான் பசுக்கொலை புரிந்ததை யாராவது அறிந்தால் என்ன நடக்குமோ என எண்ணி ஏங்கினான்.

எதற்கும், தன் வழிபடு தெய்வத்தின் துணை இருக்கிறதே என்ற துணிவோடு, அந்தப் பசுவை ஆலயத்துக்கு தென்கிழக்குத் திசையில், பற்றையுஞ் செடியும் நிறைந்திருந்த பனை மரக் கூடலுட் புதைத்துவிட்டான்.

நடந்த சம்பவத்தை மாட்டுச் சொந்தக்காரன் எப்படியோ அறிந்துவிட்டான். பறையர் குலப் பக்தன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. பசுக்கொலை புரிந்த பாதகத்துக்கும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கும் பயந்த பக்தன், தனது குறையைத் தன்வழிபடு தெய்வமான கண்ணகி அம்மைக்கு முறையிட்டு, தனக்கு அபயம் அளிக்கும்படி வேண்டினான்.

அம்மை அடியவனின் கனவில் முதிய விதவைக் கோலத்தோடு காட்சி கொடுத்தாள். "நாளையதினம் பசுக்கொலை பற்றிய விசாரணை நடக்கும். அப்போது நான் மாட்டைக் கொல்லவில்லை. பன்றியைக் கொன்று இறைச்சியை எடுத்த பின் அதன் எச்சங்களையே புதைத்தேன் என்று கூறு" என்று அருள் புரிந்தாள்.

மறுநாள் விசாரணை நடந்தது. குற்றஞ் சுமத்தப்பட்டவன் தான் மாட்டைக் கொல்லவில்லை எனவும் பன்றியைக் கொன்றதாகவும் கூறினான். புதைகுழி தோண்டப்பட்டது. என்ன அதிசயம்! மாட்டுத்தலை புதைக்கப்பட்ட இடத்தில் மாட்டுத் தலையைக் காணவில்லை, பன்றித்தலை காணப்பட்டது.

அதைக் கண்ட பக்தன் ஆடினான், பாடினான். அவ்விடத்தில் நின்றபடியே உச்சியிற் கூப்பிய கையினனாய் அன்னையைப் பணிந்தான். கண்ணீர்சோர, மெய்சிலிர்க்க, வாய்குழறி தன்னை மறந்து அம்மை தனக்கருள் புரிந்த அதிசயத்தை வாய்விட்டுக் கூறிப் பன்றித்தலைச்சி என அழைத்துப் பத்தினித் தெய்வத்தைப் பலமுறை பணிந்தான்.

அங்கு நின்றோர் அனைவரும் உண்மையை உணர்ந்தனர்; பக்தனின் பக்தியை மெச்சி வியந்தனர்; பன்றித்தலைச்சியைப் பணிந்தனர். பன்றித்தலைச்சி தனது பக்தனுக்குக் கிழக்கோலத்திற் கனவிலே காட்சி கொடுத்த காரணத்தாற் போலும் இன்றும் அன்னையைப் பற்றிப் பேசும்போது 'கிழவி' எனக் குறிப்பிட்டுப் பேசுவோர் மட்டுவிலில் வாழ்கிறார்கள்.

வற்றாப்பளைக் கண்ணகை அம்மை ஆலய வரலாறும் நந்திக் கடற்கரையில் மாடு மேய்த்த சிறுவர்களுக்குக் கண்ணகி கிழக்கோலத்திலேயே காட்சி கொடுத்தாள் எனக் கூறுகிறது. எனவே கண்ணகிக்கும் அவள் கிழக்கோலத்தில் காட்சி கொடுக்கிறாள் எனக் கூறப்படுவதற்குமுள்ள பொருத்தப்பாடு சிந்திக்கத் தக்கது.

இனி, பன்றித்தலைச்சி என்பதைப் பன்றித் தலையையுடைய தெய்வமென்று கூறுவதற்குரிய சான்றுகளும் உண்டா எனப் பார்ப்போம். "ஆனைமுகன் என்பது ஆனை முகத்தையுடைய பிள்ளையாரைக் குறிப்பது போல பன்றித்தலைச்சி என்பது பன்றித்தலையையுடைய தெய்வத்தைக்குறிக்கும்" என யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையார் பன்றித் தலைச்சி எனத் தலைப்பிட்டு இலவசமாக வெளியிட்ட பிரசுரத்திற் கூறப்படுகிறது.

1946 ஆம் ஆண்டில் கண்ணகி அம்மையின் செம்பு விக்கிரகம் ஆலயத்திற் பிரதிட்டை செய்யப்படும்வரையும், கும்பம் வைத்து அதற்குத் தங்கத்தினாற் செய்யப்பட்ட பன்றி முகத்தைச் சார்த்தி அம்மைக்குப் பூசை செய்து வந்தனர். இவ்வாறு முகஞ்சார்த்திப் பூசை செய்து வந்தமையே அம்மையைப் பன்றித் தலையுடைய தெய்வமெனச் சிவதொண்டன் வெளியீட்டிற் கூறப்பட்டமைக்குரிய காரணமாகலாம்.

பன்றித்தலைச்சி என்பது பன்றித்தலையுடைய தெய்வத்தைக் குறிக்குமெனக் கூறும் அவ்வெளியீட்டில் "பன்றித் தலையைத் தந்த தெய்வமெனினும் பன்றித்தலையுடைய தெய்வமெனினும் இரண்டுக்கும் பொருந்தப் பன்றித்தலைச்சி அம்மன் ஒரு சிறு குடிலில் இருந்து கொண்டு பெரிய அற்புதங்களைச் செய்து வருவதை நாம் கண்ணாரக் காண்கிறோம்" எனவும் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாறு, இங்கு கோயில் கொண்டிருக்கும் தெய்வம் பன்றித் தலையை உடைய தெய்வமா, பன்றித்தலையை ஆக்கிய தெய்வமா என்னும் வினாவுக்கு விடை கூறாது நழுவிச் செல்கின்றது அவ்வெளியீடு. அவ்வெளியீட்டின் கதை பிள்ளையையும் நுள்ளித் தொட்டிலையும் ஆட்டிய கதையாகிவிட்டது.

அம்மையின் மீது பாடப்பட்ட நூல்களெதுவும் அம்மையைப் பன்றித்தலையையுடைய தெய்வமெனக் கூறவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகை கோயில்களில் படிக்கப்பட்டு வந்த - படிக்கப்படுகின்ற - சிலம்பு கூறல், கோவலனார் கதை முதலிய நூல்கள் எல்லாம் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மையே என்பதற்குச் சான்று பகர்கின்றன. ஆலயத்தோடு தொடர்புடைய ஆவணங்களிலெல்லாம் "பன்றித்தலைச்சிக் கண்ணகை" என்ற சொற்றொடரே உபயோகிக்கப்பட்டு வருகிறது. எனவே இங்கெழுந்தருளியிருக்கும் தெய்வம் கண்ணகித் தெய்வம், மாட்டுத்தலையைப் பன்றித்தலையாக்கிய பத்தினித் தெய்வம் என உறுதியாக முடிவு செய்யலாம்.

அவ்வாறு முடிவு செய்யும்போது ஆதியில் கும்பத்திற் பன்றி முகத்தைச் சார்த்திப் பூசை செய்ததற்குரிய காரணம் என்ன என்னும் வினா எழுகின்றது. அவ்வினாவுக்குரிய விடையை இவ்விடத்திற் குறிப்பிட வேண்டியது அவசியமானதாகும்.

வயிரவப் பெருமான் பிரமனுடைய தலையை அரிந்து அவனை நான்முகன் ஆக்கினார். பிரமனுடைய உடலிலிருந்து இரத்த வெள்ளம் பெருகியது. வயிரவர் தனது நெற்றிக்கண் அக்கினியினால் அதனை வற்றச் செய்து பிரமனுக்கு அவனுடைய உயிரைக் கொடுத்தார். பிரமன் நல்லுணர்ச்சி பெற்றெழுந்து வயிரவப் பெருமானை வணங்கினான்.

"நான் சிவனுக்குச் செய்த குற்றங்கள் அனந்தம். அதனால் பெரும் பழியைப் பெற்றேன். உன்னருளால் எனக்கு நல்லுணர்வு உண்டானது. எனது குற்றங்கள் அனைத்தையும் பொறுத்தருள வேண்டும்" என்று இரந்தான்.

"எம்பெருமானே, சிவதூடணத்தால் தீயதாகிச் சிறுமை பெற்றது இந்தத் தலை. இது தூய்மை அடைய வேண்டும். அடியேன் காணுந்தோறும் எனது மனமயக்கம் நீங்கும் பொருட்டு உயர்ந்த சூலப்படையைத் திருக்கரத்திற் றரித்துக் கொண்டது - போல, எனது தலையையும் திருக்கரத்தில் தரித்தருள்வீராக" என்று வேண்டினான். வயிரவப் பெருமான் "அவ்வாறே ஆகுக." என்றருளிச் செய்து பிரமன் தலையைத் தன் கரத்தில் ஏந்தியருளினார்.

இதைப் போலவே, மாட்டுத்தலையைப் பன்றித்தலையாக்கிய அருட்செயலை மறவாது நினைவு கூருந்தோறும் அம்மைமீது கொண்ட அன்பு பெருகுமாதலால், அதை மறவாதிருக்கும் பொருட்டு, அடியவர்கள் அம்மைக்குத் தங்கத்தாற் செய்த பன்றி முகத்தைச் சார்த்தி வழிபட்டார்கள். அந்தப் பன்றிமுகம் அம்மையின் அருட்செயலை எடுத்துக்காட்டும் அருமையானதொரு நினைவுச் சின்னம்.

மழையே நீ வேண்டும்!

உழவுத் தொழிலுக்கு நீ வேண்டும்!
விளையும் பயிருக்கு நீ வேண்டும்!
பசிக்கும் வயிறுக்கு நீ வேண்டும்!
உலகை காக்க நீ வேண்டும்!
உயிர்கள் வாழ நீ வேண்டும்!
பசுமை பார்க்க நீ வேண்டும்!
பஞ்சம் போக்க நீ வேண்டும்!
இன்பம் நிலைக்க நீ வேண்டும்!
துன்பம் வெறுக்க நீ வேண்டும்!
ஏரி நிறைக்க நீ வேண்டும்!
எண்ணம் பழிக்க நீ வேண்டும்!
ஏக்கம் போக்க நீ வேண்டும்!
எதிரியும் வாழ நீ வேண்டும்!
அன்னம் உண்ண நீ வேண்டும்!
அன்பு தழைக்க நீ வேண்டும்!
அகிம்சை நிலைக்க நீ வேண்டும்!
கண்ணீர் துடைக்க நீ வேண்டும்!
காலம் பருவம் நீ வேண்டும்!
சொர்க்கம் காட்ட நீ வேண்டும்!
சொத்தே என்றும் நீ வேண்டும்!

- செல்வா (தமிழ்குமரன்)
(நன்றி : எழுத்து - இணையம்)

ஆகாயம் சிந்தும் பன்னீர்த் துளிகள்

ஆகாயம் அள்ளித் தெளிக்கும் பன்னீர்த் துளிகள்!
பூமியின் காயம் களையும் மாயத் துளிகள்!
ஒவ்வொரு துளியும் தேவதையே!
விண்ணின்று மண்ணிறங்கும்
ஆகாயம் கடந்து வரும் ஆயிரமாயிரம் வைரங்கள்!
கடவுளின் கருணையினைக்
கண்ணில் காட்டும் துளிகள்!
கடவுள் தாயாகித் தந்தருளும் தாய்ப்பால் துளிகள்!
ஆண்டவனின் ஆசீர்வாதம்
சுமந்து வரும் புனிதத் துளிகள்!
ஆனந்தம் அருளும் அற்புதத் துளிகள்!
அற்புதங்கள் செய்யும் அமிர்தத் துளிகள்!
பூமியின் பூவாளிக் குளியல்!
கண்ணீர் துடைக்கும் கரங்களாகும் துளிகள்!
இத்தகு அமிர்தத் துளிகளையும்
அமிலமாக்கும் கலையில்
நாம் கை தேர்ந்து விட்டோம்!!!
கண்ணீர் துடைக்கும் துளிகள்,
கண்ணீருக்குக் காரணமாவதில்
கை தேர்ந்து வருகிறது!!!!

- சிவரஞ்சனி

முருகப் பெருமான் தோற்றம் பெற்ற வைகாசி விசாகத் திருநாள்

வைகாசி விசாகம் ஆண்டுதோறும் இந்துக்களால் வைகாசி மாதம் பௌர்ணமியை ஒட்டி வரும் விசாக நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது. இது வைகாசி விசாகப் பெருவிழா என்றும் அழைக்கப்படுகிறது. இத்திருநாளே முருகப் பெருமானின் அவதார நாளாகக் கருதப்படுகிறது. புத்த மதத்தில் இந்நாள் புத்தரின் அவதார நாளாகவும், புத்தர் ஞானம் பெற்ற நாளாகவும் கொண்டாடப்படுகிறது. நம்மாழ்வார் பிறந்த தினமும் இந்நாளே ஆகும்.

விசாக நட்சத்திரம் என்பது ஆறு நட்சத்திரங்களின் கூட்டம் ஆகும். விசாக நட்சத்திரத்தில் பிறந்ததால் முருகப் பெருமானை விசாகன் என்றும் அழைக்கின்றனர். 'வி' என்றால் பட்சி (மயில்) என்றும், 'சாகன்' என்றால் பயணம் செய்பவர் என்றும் அதாவது பட்சி (மயில்) மீது பயணம் செய்பவர் என பொருள் கூறப்படுகிறது.

இந்த நாளின்போது இந்துக்கள் விரதம் இருந்தும், பால் குடம் எடுத்தும், காவடி எடுத்தும் முருகப் பெருமானை வழிபடுகின்றனர். முருகன் மட்டுமில்லாது சிவன், அம்மன் வழிபாட்டையும் மக்கள் மேற்கொள்கின்றனர்.

வைகாசி மாதம் என்பது வசந்த காலம் எனப்படும் இளவேனிற் காலத்தின் பிற்பகுதி ஆகும். எனவே வைகாசி விசாகத்தில் கோவில்களில் வசந்தோற்சவ விழாக்கள் நடத்தப்படுகின்றன.

விழா கொண்டாடுவதற்கான காரணம்

முன்னொரு சமயம் உமையம்மை சிவபக்தனான தட்சனின் மகளாக தாட்சாயணி என்னும் நாமத்துடன் அவதரித்தாள். சிவனை மருமகனாகப் பெற்ற கர்வத்தினால் தட்சன் யாகம் ஒன்றை நடத்தினான். யாகத்திற்கு சிவனைத் தவிர்த்து ஏனையோரை அழைத்திருந்தான். இதனால் சினமுற்ற உமையம்மை தாட்சாயணியாக இருக்க விருப்பமில்லை என சிவனிடம் தெரிவித்தாள். அப்போது இறைவன் பர்வத ராஜனின் வேண்டுகோளுக் கிணங்க பார்வதி என்ற திருநாமத்தோடு பர்வத ராஜனின் மகளாக அவதரிக்குமாறு அருளினார்.

இச்சமயத்தில் சூரபத்மன் என்ற அசுரன் சிவனிடமிருந்து, சிவனுக்கு இணையான சிவ அம்சக் குழந்தையால்தான் தனக்கு அழிவு வேண்டும் என்ற வரத்தினை பெற்றான். சிவனை அழைக்காத யாகத்திற்குச் சென்றதால் தேவர்கள் அனைவரும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசூரன் ஆகிய அசுர சகோதரர்களின் துன்பத்திற்கு ஆளாயினர். அவர்கள் தங்கள் துயரம் தீர சிவபாலனின் அவதாரம்தான் தீர்வு என்று எண்ணி சிவனைப் பார்க்கச் சென்றனர். அப்போது சிவன் ஆழ்ந்த

தியானத்தில் இருந்தார். பார்வதியும் சிவனை நினைத்து தவம் புரிந்து கொண்டிருந்தாள். தேவர்கள் சிவனின் தியானத்தைக் கலைக்கும்படி மன்மதனை வேண்டினர்.

மன்மதன் சிவனின் தவத்தை கலைக்க முற்படுகையில் சிவன் தனது நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை சாம்பலாக்கினார். சிவபார்வதி திருமணத்திற்குப் பின் சிவகுமாரன் தோன்றுவான் என்று அருளினார். பார்வதி பரமேஸ்வர் திருமணம் பங்குனி உத்திரம் நாளில் நடந்தேறியது.

நாட்கள் ஆகியும் சிவகுமாரன் தோன்றாததால் தேவர்கள் கவலையுற்று இறைவனை வேண்ட சிவன் தனது ஐந்து முகத்தோடு ஆறாவது முகமான அதோ முகத்தைச் சேர்த்து மொத்தம் ஆறு முகத்திலிருந்தும் நெருப்புப் பொறிகளை உருவாக்கினார். அவற்றை அக்னி மற்றும் வாயு பகவான்களின் மூலம் கங்கையின் சரவணப் பொய்கையில் சேர்ப்பிக்கச் செய்தார். நெருப்புப்பொறிகள் சரவணப் பொய்கையில் ஆறு தாமரை மலர்களில் ஆறு குழந்தைகளாக மாறின.

கார்த்திகைப் பெண்கள் அவ்வாறு குழந்தைகளையும் பாலூட்டி, சீராட்டி வளர்த்தனர். ஒருநாள் தனது குழந்தையைக் காண பார்வதிதேவி சென்ற போது ஆறு குழந்தைகளையும் ஒன்று சேர்த்தாள். ஆறு முகங்கள் மற்றும் ஒரு உடலுடன் குழந்தை காட்சியளித்தது. அப்போது பார்வதிதேவி குழந்தைக்கு ஞானப்பால் புகட்டினார்.

குழந்தையின் வாயிலிருந்து சிந்திய பாலை உண்ட சரவணப் பொய்கை மீன்கள் முனிகுமார்களாக உருப்பெற்றனர். ஆறு முகங்களை பெற்றிருந்ததால் முருகன் ஆறுமுகன் என்று அழைக்கப்பட்டார். இவ்வாறு முருகன் அவதரித்த நாள் பௌர்ணமியுடன் கூடிய வைகாசி விசாகம் ஆகும். எனவே இந்நாள் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

விழா கொண்டாடப்படும் முறை

இவ்விழா எல்லா முருகன் கோவில்களிலும் கொண்டாடப்படுகிறது. முருகனின் ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், பழனி, திருச்செந்தூர், சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை ஆகிய இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் பால் குடம் எடுத்தல், காவடி எடுத்தல், அலகு குத்துதல், பாதயாத்திரை செல்லல் போன்ற வேண்டுதல்களை இந்நாளில் மேற்கொள்கின்றனர். சில இடங்களில் தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. ஒருசில கோவில்களில் பத்து நாட்கள் கொண்டாட்டம் நடைபெறுகின்றது.

இளவேனிற் காலத்தில் இவ்விழா நடைபெறுவதால் திருச்செந்தூரில் கருவறையில் தண்ணீர் கட்டி நிற்கும்படி செய்து இறைவனுக்குச் சிறுபருப்புப்

பாயாசம், நீர்மோர், அப்பம் முதலியவற்றைப் படைத்து உஷ்ணசாந்தி உற்சவம் (வெப்பம் தணிக்கும் விழா) என்ற நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இங்கு வசந்த மண்டபத்தில் உள்ள நீர்த் தொட்டியில் ஆறு மீன் பொம்மைகளை நீரில் இடப்பட்டு, குமரன் வாயில் இருந்து சிந்திய பாலினை உண்டதால் சாபம் நீங்கப் பெற்ற பாரசமுனி குமாரர்களை நினைவுபடுத்தும் விதமாக ஆறு முனிவர்களின் உருவங்களையும் வைத்து சாப விமோசன நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

விரத வழிபாட்டு முறை

மக்கள் இந்நாளில் விரதம் மேற்கொள்கின்றனர். அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து குளிர்ந்த நீரில் நீராடி வீட்டிலோ அல்லது அருகில் உள்ள கோவிலுக்கோ சென்று வழிபாடு மேற்கொண்டு விரதத்தைத் தொடங்குகின்றனர்.

பின் பகல் முழுவதும் உணவருந்தாமலோ அல்லது பால், பழத்தினை உண்டோ சஷ்டி கவசம், சண்முக கவசம், கந்தகுரு கவசம், திருப்புகழ் போன்ற பாடல்களைப் பாடியும், ஓம் சரவணபவ என்ற மந்திரத்தை உச்சரித்தும் வருகின்றனர். மீண்டும் மாலையில் கோவிலுக்குச் சென்று விளக்கேற்றி வழிபடுகின்றனர். வழிபாட்டின் போது சர்க்கரைப் பொங்கல், நீர்மோர், பானகம், தயிர் அன்னம், அப்பம் ஆகியவற்றைப் படைக்கின்றனர். செவ்வரளி, நாகலிங்கப்பூ, செந்தாமரை, மல்லிகை முதலிய மலர்கள் கொண்டு வழிபாடு செய்கின்றனர்.

இந்நாளில் குடை, செருப்பு, நீர்மோர், பானகம், தயிர் அன்னம் ஆகியவை தானமாக வழங்கப்படுகின்றன. மலைக் கோவில்களில் மலையைச் சுற்றிலும் கிரிவலம் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்விரதத்தினை மேற்கொள்வதால் குழந்தைப்பேறு கிட்டும். நல்ல மணவாழ்க்கை அமையும். நோயில்லா நீண்ட ஆயுள் கிடைக்கும் என்று கருதப்படுகிறது.

வைகாசி விசாகத்தின் சிறப்பு

வைகாசி விசாகம் முருகனின் அவதார நாளாகக் கொண்டாடப்படுகிறது. எமதர்ம ராஜனின் அவதார தினமாகவும் கருதப்படுகிறது. எனவே இந்நாளில் விரதம் மேற்கொண்டு வழிபாடு செய்வதால் நோய் நீங்கி நீடித்த ஆயுள் கிடைப்பதாகக் கருதப்படுகிறது.

மகாபாரதத்தின் வில்வீரனான அர்ஜுனன் பாசுபதா ஆயுதத்தை சிவபெருமானிடமிருந்து பெற்றநாள் வைகாசி விசாகமாகும். திருமழப்பாடி என்னும்

ஊரில் சிவபெருமான் மழு ஏந்தி திருநடனம் புரிந்ததும் இந்நாளே. பன்னிருஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் பிறந்த தினமும் இந்நாளே ஆகும்.

சோழ சக்கரவர்த்தியான ராஜராஜ சோழனின் சரித்திரத்தை நாடகமாக ஆண்டுதோறும் வைகாசி விசாகத் திருநாளில் நடத்திய நாடகக் கலைஞர்களுக்கு ஊதியமாக நெல் வழங்கிட ஆணையை இராஜேந்திரச் சோழன் பிறப்பித்து இருந்ததாக தஞ்சை பெரிய கோவிலில் உள்ள கல்வெட்டுச் செய்தி ஒன்று குறிப்பிடுகிறது.

வடலூரில் இராமலிங்க அடிகளார் சத்யஞான சபையை நிறுவியதும் இந்நாள் தான். பெரும்பான்மையான கோவில்களில் மகா உற்சவம் நடத்தப்படுகிறது. வைகாசி விசாகத்தன்று பிறப்பவர்கள் அறிவில் சிறந்தவர்களாக இருப்பார்கள் என்றும் கருதப்படுகிறது.

வான்மீகி இராமாயணத்தில், விஸ்வாமித்திரர் இராம-லட்சுமணர்களுக்கு குமரனின் பிறப்பு மற்றும் பெருமைகளைக் கூறுவார். மேலும் இதனை கூறுபவர் மற்றும் கேட்பவர்களுக்கு பாவங்கள் நீங்குவதாக சொல்லுவார். இந்நிகழ்வை குமாரசம்பவம் என்று வான்மீகி குறிப்பிடுவார்.

இதனை பின்பற்றியே வடமொழிக் கவிஞரான காளிதாசர் முருகனின் பிறப்பு மற்றும் அவரின் பெருமைகள்பற்றி கூறி அந்நூலிற்கு குமார சம்பவம் என்றும் பெயரிட்டுள்ளார்.

சித்தார்த்தர் என்னும் கௌதம புத்தர் பிறந்த நாளும், அவர் ஞானத்தை அடைந்த நாளும் வைகாசி பௌர்ணமி அன்று கொண்டாடப்படுகிறது. இதனையே புத்த பூர்ணிமா என்று அழைக்கின்றனர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த வைகாசி விசாகத்தில் நாமும் விரத முறையைப் பின்பற்றி வாழ்வின் உயர்ந்த நிலையை அடைவோம்.

(நன்றி : இணையம்)

திருவாசகம்	திருவிசைப்பா
பாரொடு விண்ணாய்ப் பரந்தளம் பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய் சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே திருப்பெருந் துறையுறை சிவனே யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன் ஆண்டநீ அருளிலை யானால் வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய் வருகஎன் றருள்புரி யாயே!	ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள் தித்திக்கும் தேனே அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே அம்பலம் ஆடரங் காக வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே!

லஷ்மி கடாட்சம்

சிவஸ்ரீ நா.நடராஜக் குருக்கள்

லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி மூன்று தேவிகளுமே சக்தியின் வெவ்வேறு அவதாரங்கள்தான். சிவனும் சக்தியுமே ஒன்றுதான். சக்திதான் ராமனாக அவதரித்ததாகவும் சிவன் சீதையாக அவதாரம் செய்ததாகவும் சொல்வார்கள். பெண்மை - தாய்மை இதற்கு நாம் காட்டும் மதிப்பும் மரியாதையும்தான் நமது சக்தி வழிபாடு.

நம்முடைய ஆதி முதற்கடவுளரான பிரம்மா, விஷ்ணு, சிவன் முறையே நாக்கு, மார்பு, உடம்பின் இடப்பகுதி என்பவற்றில் சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி இவர்களை வைத்துக் கொண்டிருப்பது ஒன்றில்லாமல் இன்னொன்று இயங்காது என்கிற தத்துவத்தைத் தெரிவிக்கின்றது.

மஹா என்கிற அடைமொழியே லக்ஷ்மி தேவியின் பெருமையைத் தெளிவாகக் கூறுகின்றது. லக்ஷ்மி என்கிற சொல்லுக்கு அழகு, செல்வம், பெருமை, ராஜகம்பீரம் என்று பொருள் என்கிறது நிகண்டு. "பளிச்" என்று இருப்பதை 'லக்ஷ்மிகரமாய் இருக்கிறது' என்கிறோம். தேவர்களும் அசுரர்களுமாய்ப் பாற்கடலைக் கடைந்தபோது அவதாரம் செய்தவள் லக்ஷ்மி. அவளை அப்படியே மார்பில் தரித்துக் கொண்டார் மகாவிஷ்ணு. லக்ஷ்மி செல்வத்துக்கு அதிபதி. தனமும் தான்யமும் வஸ்திரமும் கனகமும் இந்த உலக வாழ்க்கைக்குத் தேவையான வஸ்த்துக்கள். இதனால்தான் திருவள்ளுவர் சொன்னார்,

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

ஸ்ரீமஹாலக்ஷ்மி இகவாழ்க்கை சிறக்கச் செய்கிறாள். தின பூஜா விதிகளில் லக்ஷ்மி பூஜையும் ஒன்று. தீபாவளியை மார்வாடிகள் லக்ஷ்மி பூஜா தினமாகக் கொண்டாடுவார்கள். செல்வம் கொழிக்கத்தானே செய்கிறது அவர்களிடம். ஆதி சங்கரர் பிரம்மச்சாரியாக இருந்து பிட்சை கேட்கப்போன இடத்திலே ஒரு வீட்டில் மகா தரித்திரமாய் இருந்ததால் அந்த வீட்டு அம்மாள் பிரம்மச்சாரிக்கு ஒன்றும் கொடுக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டாள். ஸ்ரீ பகவத் பாதாள் 'கனகதாராஸ்தவம்' பாடி அந்த வீட்டில் பொன்மழை பொழியச் செய்தாராம்.

ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் பூரணத்துவம் பெற தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்ற நான்கையும் தான் சொன்னார்கள். அந்த அர்த்தத்தை, 'பொருளை' அளிப்பவள்தான் மகாலக்ஷ்மி. ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளும், கிரஹஸ்தன் பொருளை நியாயமாக சம்பாதித்து மற்ற ஆசிரமத்திலிருக்கின்றவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதைத்தான்,

"யல்ல பஸே நிஜ கர்மோபாத்தம்
விததம் தேந விநோத யசித்தம்" என்று சொன்னார்.

மஹாலக்ஷ்மி என்றால் பணத்துக்கு அதிபதி, பணத்தைக் கொடுப்பவள் என்று மட்டும் எண்ணிவிடக் கூடாது. 'பரோ பகரார்த்தம் இதம் சரீரம்' என்பார்கள். நம்முடைய இந்த உடம்பு மட்டுமல்ல நமக்குக் கிடைக்கும் செல்வம் கூட பிறருக்கு உதவுவதற்குத்தான் பயன்படவேண்டும். அதனால்தான் மஹா லக்ஷ்மியை ஸ்துதித்த ஆதிசங்கரர் 'ஸம்பத்கராணி' என்ற ஸ்லோகத்தில் அம்பிகையை மனத்தின் அழுக்கை நீக்கி சுத்தப்படுத்துபவளாகக் கூறுகின்றார்.

மஹாவிஷ்ணுவுக்கு 'புருஷோத்தமன்' என்று பெயர். மனிதர் குலத் தோன்றல் என்று அர்த்தம். அதே போல ஸ்ரீமஹா லக்ஷ்மி 'உத்தமஸ்திரீ' - பெண்களின் திலகம் என்று அழைக்கப்படுகின்றாள்.

அவள் பிறப்பிடம் பாற்கடல். வெண்மை பரிசுத்தத்துக்கும், சத்வ குணத்துக்கும் அடையாளம். செல்வத்துக்கு அதிபதியான லக்ஷ்மி செல்வத்தை அள்ளிக் கொடுப்பாள் என்பது உண்மைதான். ஆனால் செல்வத்துக்கு தானாகச் செல்லும் குணம்தான் உண்டே தவிர, தானாக வரும் குணம் கிடையாது . முயற்சி செய்து பாடுபட்டால் பலன் கைகூடும். பாற்கடலைக் கடைந்ததால் லக்ஷ்மி வந்தாள் என்பது இதைத்தான் குறிப்பிடுகின்றது.

பாற்கடலைக் கடைந்தபோது மஹாலக்ஷ்மி அதிலிருந்து வந்ததை பாகவதப் புராணம் சொல்கின்றது. இதில் இன்னொரு குறிப்பும் அடங்கியிருக்கிறது. தூய்மையான மனத்துடன். ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டால் தர்ம சிந்தனைகள் ஏற்படும் என்பதுதான் அது. ஏனென்றால் செல்வம் என்பது வெறும் பணம் காசை மட்டும் குறிக்காது. திருவள்ளுவர் கல்விச் செல்வம், கேள்விச் செல்வம் என்றெல்லாம் சொன்னார். புத்தி, ஒழுக்கம், தர்மசிந்தனை இவற்றிலும் நிறைவு பெற்றிருப்பவர்தான் உண்மையான செல்வந்தன். பொருட் செல்வம் மட்டும் போதாது அருட் செல்வமும் வேண்டும். அதைத் தருபவள்தான் மஹாலக்ஷ்மி.

மஹாலட்சுமி தாமரை மலர் மேல் வீற்றிருக்கின்றாள். தாமரை, அழகு, புனிதம் இவற்றுக்கு அடையாளம். மஹாலக்ஷ்மியின் கையிலிருந்து பக்தர்களுக்காக சதாசர்வகாலமும் ஸ்வர்ணம் மழையாகப் பொழிந்து கொண்டிருக்கிறது. இதனால் மஹா லக்ஷ்மியின் கையே ஸர்ணஹஸ்தம் ஆகிவிட்டது.

மஹாலக்ஷ்மிக்கு நான்கு கைகள் இருப்பதாகவும் ஓர் ஐதீகம் உண்டு. ஒரு கை பொன் கொழிக்கும் . இன்னொரு கை அஞ்சேல் என்று அபயம் அளிக்கும். மற்றைய இரு கைகளும் தாமரைகளை ஏந்தி நிற்கும். தாமரைகள் ஆத்மஞானத்தைக் குறிக்கும்.

மஹாலக்ஷ்மியின் வாகனம் ஆந்தை. "ஆந்தையே! லட்சுமி கடாட்சத்தால் தோன்றுகின்ற செல்வத்தின் பளபளப்பில் எங்கள் கண் குருடாகி பேராசையும், பாவமும் ஏற்பட்டு விடாமல் எங்களைக் காப்பாற்று"! என்பது ஒரு மொழி. ஆந்தை அறிவைக் குறிக்கும். அதாவது, பெற்ற செல்வத்தை எப்படி செலவு செய்வது என்பது தெரிந்தால்தான் செல்வத்துக்கு பயன்.

அஷ்டலக்ஷ்மி தோத்திரத்தில் ஆதிலக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி, கஜ லக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, வித்யா லக்ஷ்மி, தனலக்ஷ்மி என்று

போற்றப்படுகிறாள் மஹாலஷ்மி. செல்வம் - படைபலம், வீரம், ஜெயம் எல்லாவற்றையும் தருகிறவள். அவள் லட்சுமியும், சரஸ்வதியும் வேறல்ல என்பதைத் தெளிவுபடுத்துவது போல் வித்தியாலட்சுமியாகவும் இருக்கிறாள்.

அஷ்ட லட்சுமி க்தோத்திரத்தில் 'பார்கவி' என்று இருமுறை லட்சுமியின் பெயர் அழைக்கப் படுகின்றது. பிருகு மகரிஷி, மஹாலட்சுமி தன்மகளாக வரவேண்டுமென்று தவம் இருந்து அவளை மகளாகப் பெற்றதால், மஹாலட்சுமிக்கு பார்கவி (பிருகுவின் மகள்) என்ற பெயர் வந்தது.

பெண்ணைத் தாயாகவும் சஹதர்மினி (தன் கூட இருந்து பொறுப்புக்களை நிறைவேற்றுபவள்) யாகவும், பெண்ணாகவும் போற்றும் மதம் நமது இந்து மதம். இறைவனை குருவாகவும், சீடனாகவும், காதலனாகவும், காதலியாகவும், தாயாகவும், தந்தையாகவும், பிள்ளையாகவும், பக்திப்பெருக்கினால் மகான்கள் பாடிப்பரவிய தேசத்தில் லட்சுமியைத் தன் மகளாக அடைய பிருகு விரும்பியதில் வியப்பில்லையே!

வீட்டில் லக்ஷ்மி கடாட்ஷம் நிறைந்திருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில் தான் பெண் குழந்தைகள் பெயரோடு லட்சுமி என்பதைச் சேர்த்து சீதாலஷ்மி, ராமலஷ்மி, அனந்தலஷ்மி என்றெல்லாம் கூப்பிடுகிறார்கள்.

மகாலஷ்மிக்கும் தாமரைப்பூவுக்கும் சொந்தம் அதிகம். அவள் தாமரையில் இருப்பவள்; தாமரையை கையில் வைத்திருப்பவள்; தாமரை போன்ற திருவடிகளை உடையவள்; தாமரை இதழ் போன்ற கண்களை உடையவள்.

பத்மப்பிரியே பத்மினி பத்ம ஹஸ்தே
பத்மாலயே பத்ம தளாயதாட்சி

என்று அவள் புகழப்படுகிறாள்.

லட்சுமி நிரந்தரமாக தங்கியிருப்பதாகக் கூறப்படும் இடங்கள் ஐந்து என்று காஞ்சிப் பெரியவர் சொல்லியிருக்கின்றார். "தாமரைப் பூவின் நடுப்பகுதி; யானையின் மத்தகம்; பசுவின் பின்புறம்; வில்வ இலையின் பின்பக்கம்; சுமங்கலிகளின் வகிடு"

இலட்சுமியை வழிபடுபவர்களுக்கு அன்னம், வஸ்திரம், தனம், தான்யம் முதலான சம்பத்துக்கள் கிடைக்கப்பெறுவதோடு கிடைத்த செல்வத்தை நன்கு செலவிடுகின்ற புத்தியும் அதனால் சித்திக்கின்ற முக்தியும் கிடைக்கும்.

பொய்யனேன் அகம் நெகப் புகுந்து, அமுது ஊறும்,
புலமலர்க் கழல் இணை அடி பிரிந்தும்,
கையனேன், இன்னும் செத்திலேன் அந்தோ!
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்,
ஐயனே! அரசே! அருள் பெரும் கடலே!
அத்தனே! அயன், மாற்கு, அறி ஒண்ணாச்
செய்ய மேனியனே! செய்வகை அறியேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. **(திருவாசகம் - செத்திலாப்பத்து)**

துர்க்காபுரம் மகளிர் இல்லம்
37ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும்
(07.04.2019)

ஞானப் பயணம்

த.ஜெயசீலன்

யோகர் சுவாமிகளின் 55ஆவது குருபூசை நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர், ஆதீன துறவிகள் மற்றும் மேல்நாட்டு அடியவர்கள் என்போரின் யாழ். வருகை தொடர்பான சிறப்புக் கவிதை இது.

எங்கோ சுரக்கின்ற சூரியனின் எழிற்கதிர்கள்
இங்குவரை வந்து
எமையெல்லாம் போஷித்துக்
காத்து அருள்வதென....
நல்லூரான் தேரடியில்
பூத்து எழுந்து புனிதப் பிறவியான
சித்தர் மரபின், எம் சித்தர் பரம்பரையின்,
அற்புதக் கடைசி அவதார புருஷரான
'யோகர் சுவாமிகளின்' ஞான ஒளி
உலகின்
நாகரீக உச்ச நாடுவரை சென்றங்கே
சீடர்களைத் தோற்றுவித்து,
அவர்களைச் செழுஞ்சைவப்
பாதையிலே பயணிக்கப் பணித்து,
நமது ஞான
மேன்மை பகர்வதனை
கேட்டுமெய் சிலிர்த்தோம் யாம்!
ஆன்மீக அமெரிக்க அன்பர்கள்
அன்னைமடி
தேடித், தம் ஞான குருவின் காலடி நாடி,
தம் குருவை அன்று தடுத்தாண்ட
நல்லை
எம்பிரான் நிழலில்
இளைப்பாறி மீளவந்தார்...
என்கின்ற சேதியினால்
இறும்பூது எய்துகிறோம்!
விண்ணையும் மண்ணையும் விரைந்து இணைக்கும்
ஆன்மீக
உண்மைப் பயணம் ஒளிர
இறையை நேர்ந்தோம்!

செல்வ நெடுமாடம்

பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ குகசர்மா

தில்லையில் செல்வம் பொருந்திய நெடிய மாடங்கள் ஆகாயத்திலே உயர்ந்து மதிதோய நின்ற காட்சியை சம்பந்தர் தமது தேவாரத்தில் பாடுகிறார். அருட்செல்வம் மிகுந்த அந்த மாடங்களிலே செல்வன் கழலேத்தும் செல்வர் வாழ்ந்தார்கள். சிவபெருமானிடத்திலே மனதை வைத்து பக்குவநிலை அடைந்த அடியார்களுக்கெல்லாம் காணும் காட்சிகள் யாவும் சிவத்தோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். இந்த உண்மைகளைப் பின்வரும் செல்வநெடு மாடங்களில் பார்ப்போம்.

இறைவனுடைய உண்மை அடியார்கள் அவரது சேவடிகளை வணங்கும்போது பல மெய்ப்பாடுகள் தோன்றும்.

"என்பு நைந்துருகி நெக்கு நெக்கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதா என்றரற்றி
உரைதடு மாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்கள் கூர நுண்டுளி அரும்ப"

என மாணிக்கவாசகர் கூறும் போற்றித்திருவகவலில் இந்த மெய்ப்பாடுகள் காணப்படுகின்றன. இது "சாயா" அன்பின் அதாவது நிலை தளரா அன்பின் அடையாளங்கள். நடராசப் பெருமானின் கூத்தைத் தரிசித்த நாவுக்கரசருக்கு ஏற்பட்ட மெய்ப்பாட்டைச் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்.

"கையுந் தலைமிசை புனையுஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன கரணம் களுமுடன்
உருகும் பரிவின்
மெய்யும் தரைமிசை வீழுமுன் பெழுதரு
மின்றாள் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநட மெதிர்கும் பிடுமவ ராரவம்
பெருகுதல் அளவின்றால்"

இங்கேயும், முன்பு கூறப்பட்ட திருவாசக அடிகளிலும் சிறந்த பல மெய்ப்பாடுகளைக் காண்கிறோம், பல மெய்ப்பாடுகள் இரு பாடல்களிலும் பொதுவாகக் காணப்படுகின்றன. சிறப்பாகக் கண்ணீர் சொரிதல் என்ற மெய்ப்பாட்டினை இங்கு எடுத்துக்கொள்வோம்.

மதுரையம்பதியிலே ஒரு மாளிகை, அது சந்திரகாந்தக் கற்களால் ஆனது. சந்திரன் உதித்தவுடன் சந்திரகாந்தக் கற்கள் ஒளியையுடைய நீரைக் கக்குகின்றன. சந்திரன் நீலநிறக் களங்கத்தைக் கொண்டது. எனவே அது நீலமணிமிடற்றண்ணலாக உருவகிக்கப்படுகிறது.

"ஆல நின்றமா மணிமிடற் றண்ணலா னந்த
கோல் நின்ற சேவடி குறுகினார் குணம்போல்
வேலை நின்றெழு மதியெதிர் வெண்ணிலாத் தெண்ணீர்
கால நின்றன சந்திர காந்தமா ளிகையே"

சைவசித்தாந்த சாத்திரப்படி ஆன்மாக்கள் இறைவனுடன் கலக்கும் நிலை பேதம், அபேதம், பேதாபேதம் என்று மூன்று நிலைகளிலும் வேறான தொன்று. அதுவே அத்துவிதம் என்று கூறப்படுகிறது.

"அறத்தினால் விளைவதாய் உடலுயிர்க்கண் அருக்கன்
அறிவொளிபோற் பிறிவரும் அத்துவித மாகும்"

என இந்நிலையைச் சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூல் கூறும்.

மதுரையம்பதியில் ஒரு வீதியில் பளிங்குக் கற்களாலாய மேல் வீடுகள் உண்டு. அந்த மேல் வீடுகளில் இருந்து வீசுகின்ற ஒளியில் பல நிலை இயற்பொருள்களும், இயங்கியற் பொருள்களும், அதனுடன் கலந்து விளங்குகின்றன. இக்காட்சியை நோக்கும் புலவருக்கு மற்றொரு காட்சி நினைவுக்கு வருகிறது. வெள்ளி மன்றிலில் நடனம் செய்யும் இறைவனின் திருவடிகளில் ஒன்றி ஒன்றும் ஆகாமல் வேறும் ஆகாமல் கலந்த உயிர்களின் நிலையை அவர் நினைத்துப் பார்க்கிறார். தமது நினைவைச் செய்யுளில் தருகிறார்

"குன்ற நேர்பளிக் குபரிகை நிலைதொறும் குழுமி
நின்ற பல்சரா சரமும் நீழல்வாய் வெள்ளி
மன்ற கம்பொலிந் தாடிய மலரடி நிழல்புக்
கொன்றி யொன்றுறக் கலந்தபல் லுயிர்நிலை யனைய"

உதாரணப் பாடல்களாக மேற்காட்டிய பாடல்கள் இரண்டும் திருவிளையாடற் புராண நகரப் படலத்தில் உள்ளன.

சுவாமி சிவானந்தரின் உபதேச மணிகள்

- எந்தச் சிறு கருமத்தைச் செய்தாலும் சரி. உனது உள்ளம், மனம், புத்தி, ஆத்மா அனைத்தையும் அதில் ஒருமைப்படுத்து, ஆத்மீக வாழ்வில் வெற்றி பெறுவதற்குள்ள யோகமார்க்கம் இதுவே.
- பிறவுயிரைக் கொல்லுதல் மற்ற எல்லாப் பாதகச் செயல்களுக்கும் இடமாதலால் அதனை அறவே விடு. கொல்லாமை, சத்திய வசனம், வீரியக்காப்பு மூன்றும் ஆத்மீக சாதகர்கட்கு இன்றியமையாதன.
- வாதங்களில் தலையிட்டு வீணாகச் சக்தியை இழக்காதே. குரங்குபோல் அலையும் மனத்தை அடக்குவதற்கு மௌனத்தை விடச் சிறந்த சாதனையில்லை. ஆகையால் தினந்தோறும் இரண்டுமணித்தியாலமாவது மௌனமாயிருக்கப் பழகு.

கண்ணனும் கர்ணனும்

சி.ஜெயகுகன்

"களைத்திருப்பவனிற்கு வழி நெடுத்திருக்கும், அதேபோல் அறிவற்ற மூடருக்கு வாழ்வு துயர் நிறைந்ததாக இருக்கும்." என்பது புத்தரின் அருள் மொழி. இது வாழ்வின் சூழ்நிலைகள் எவ்வாறு மனிதனின் வாழ்க்கையை மாற்றியமைப்பதில் தாக்கம் செலுத்துகின்றன என்பனை எடுத்துக் காட்டுகின்றது. இங்கே சூழ்நிலைகள் என்னும்போது நாம் கருதுவது சமூகச் சூழ்நிலைகளையே ஆகும். தனது வாழ்வின் சூழ்நிலைகளை சாதகமான முறையில் மாற்றியமைக்கத் தெரிந்தோர் வெற்றியாளர்களாக மிளிர்வர், ஏனையோர் சூழ்நிலைக் கைதிகளாகித் துன்பப்படுவர். (நல்ல சூழ்நிலைகளை தமது மதியீனத்தால் கெடுத்துக்கொள்வோரும் உள்ளனர்) இந் நிலையில் மகாபாரதத்தின் இரு கதாபாத்திரங்களான கண்ணன், கர்ணன் என்போரின் வாழ்வுடன் இவ்விடயங்களை ஒப்பிட்டு நோக்குவோம்.

இருவரினது பிறப்பும் துயர்நிறைந்ததாகவே ஆரம்பிக்கின்றது. கண்ணன் நள்ளிரவில் கம்சனின் சிறையில் பிறந்தான். அதனை தனது திருப்பாவையில் "ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர.." என திருவாய் மொழிகின்றாள் ஆண்டாள். கர்ணனது பிறப்பும் கன்னியாய் இருந்த குந்தியின் மூலமாக இரகசியமாகவே நிகழ்ந்தது. பிறந்ததும் கூடையில் வைக்கப்பட்டு ஆற்றில் விடப்பட்ட குழந்தை தேரேட்டியின் மகனாய் வளரவேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. இந்த வகையில் இருவரது பிறப்பின் சூழ்நிலைகளும் துயரம் நிறைந்ததாகவே அமைந்திருந்தன.

அதன் பின்னர் இருவரும் வளர்ந்த சூழ்நிலைகளை நோக்குவோமாயின், கண்ணன் ஆயர்பாடியில் கோபியரின் அன்பில் திளைத்தான். கோபியர்களுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தான். வளரும் விளையாட்டுப் பிள்ளையாகவே தனது பால்யப்பருவ லீலைகளைப் புரிந்தான். உறிதிருடித் தின்றான், வயிற்றைப் பெருப்பித்து கயிற்றைப் போதாமற் செய்தான், உரலை இழுத்து மருதமரங்களை விழுத்தினான். காளிங்கன் மேல் நடனமாடினான். கன்று மேய்த்துப் புல்லாங்குழல் ஊதினான். குன்றைக் குடையாக்கி நடனம் புரிந்தான். அவற்றில் குழந்தைப் பருவத்திற்குரிய குறும்புத்தனமும் ஆளுமை விருத்தியின் அம்சங்களும் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம். இது பூரண ஆளுமை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது. ஆனால் கர்ணனோ பிறரது அன்பிற்காக ஏங்கியே வளர்ந்தான். அது அவனது பிற்கால ஆளுமையிலும் தாக்கம் செலுத்துவதைக் காணலாம். அதனாலேயே குந்தியைத் தனது தாயெனக் கண்டவுடன் அவள் கேட்ட வரங்களையெல்லாம் கொடுத்தான் கர்ணன். இது அவனது கடமையைப் பின்னர் செய்வதற்கு தடையாய் அமைந்திருப்பதைக் காணலாம்.

கண்ணனின் நட்பினை நோக்கின் குருகுலத்தில் கிடைத்தது குசேலனின் நட்பு. அது எதிர்பார்ப்பு எதுவுமில்லாத அன்பு கலந்த தூயநட்பாகவே விளங்கியது. அவர்

எதனையும் கேளாமலே அள்ளிக் கொடுத்தான் கண்ணன். அதன் பின்னர் பாண்டவர்களுடன் ஏற்பட்ட நட்பு அவர்களுக்கும் திரௌபதிக்கும் உதவிபுரியக் கிடைத்த வாய்ப்பாக அமைந்ததேயன்றி அவர்களிடம் எதனையும் பெறும் நிலைக்கு கண்ணனைக் கொண்டு செல்லவில்லை. ஆனால் கர்ணனோ தான் அந்தணன் எனப் பொய் கூறியே கல்வி கற்றான். அதனால் தனது ஆசிரியரின் சாபத்திற்கும் உட்பட்டான். மேலும், ஏனைய அரசிளம் குமாரர்களுடன் ஒப்பிட்டு தாழ்வுச்சிக்கலை அடைந்தான். இதனால் சமூகத்தினை தனது முழு ஆளுமையுடன் எதிர்கொள்ளத் தயங்கினான். இதற்கான முக்கியமானதொரு காரணமாக அமைந்தது அவன் இளவயதிற் பட்ட அவமானங்களே ஆகும்.

கண்ணன் கம்சனை வதைத்தான். துவாரகையை தனது ஆளுமையினாலேயே அமைத்துக் கொண்டான். ஆனால் கர்ணனோ அங்கத தேசத்தை துரியோதனனிடம் தானமாகப் பெற்றான். மேலும் திரௌபதியின் சுயம்வரத்தில் பங்குபற்ற முயன்றும் முடியாமற் போனது. ஆனால் கண்ணனே உருக்குமணியை அவளது காதலின் பேரில் அடைந்தான். இங்கே தனது சூழ்நிலை அறிந்து முடிவெடுப்பதில் காணப்பட்ட நேர்த்தி அவர்களின் வாழ்வின் ஆளுமையைத் தீர்மானிப்பதில் காரணமாக அமைந்தது. அதுபோல கண்ணன் பாண்டவர்களுடன் சூதாட்டத்தில் பங்குபற்றவில்லை. ஆனால் கர்ணனோ பாஞ்சாலியை சபையில் அவமதித்து தனது மனக்காழ்ப்புணர்வைக் காட்டினான். நீதியறிந்திருந்தும் அதற்கு மாறாகச் செயற்பட்டான். இதிலும் சுயமுடிவெடுக்கும் திறனில் முக்கியத்துவத்தினை உணரமுடியும்.

கர்ணன் சிறந்த கொடையாளி ஆயினும் தனது புகழ் விரும்பியே பொரும்பாலும் கொடையளித்தான். இது ரஜோகுணத்தின் பாற்பட்டது. உதாரணமாக வந்திருப்பது இந்திரன் என அறிந்திருந்தும் கவசகுண்டலங்களைத் தானமாகக் கொடுத்தமையும், அர்ச்சுனன் மேல் நாகஸ்திரத்தை ஒரு முறைக்கு மேல் ஏவமாட்டேன் என குந்திக்கு வாக்களித்தமையும் சிறந்த உதாரணங்களாகும். எனினும் கண்ணனோ பாரதப் போரில் அவ்வாறனதொரு தானத்தை எவர்க்கும் வழங்கவில்லை. தன்னை நடுநிலையாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தினான். அதனாலேயே படைகளைத் துரியோதனனுக்கு வழங்கினான். அத்துடன் கண்ணன் எப்போதும் தன்னைக் கட்டுப்படுத்தும் வாக்குறுதிகளை வழங்கவில்லை. இதனால் சூழ்நிலைக் கைதியாவதிலிருந்து தவிர்த்துக் கொண்டான். அதேபோல சாதாரண யுத்தவிதிகளை பல சந்தர்ப்பங்களில் அறத்தின் வெற்றியை முன்னிட்டு பின்பற்றாது விட்டான். உதாரணமாக ஜயந்தரனை அர்ச்சுனன் வதைப்பதற்கு தனது சக்கராயுதத்தைப் பயன்படுத்தி சூரியன் மறைவதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியமையும் பீஷ்மர், துரோணர், கர்ணன் ஆகிய துரியோதனனின் படைத்தளபதிகளை யுத்த விதிகளை மீறியே குருஷேத்திரத்தில் வீழ்ந்து போகச் செய்தான். இவை சமூகப் பார்வையை அளவுக்கதிகமாகக் கொண்டாடி எமது கடமையைக் கைவிட வேண்டியதில்லை என்ற மேலானதொரு பாடத்தை எமக்கு உணர்த்துகின்றது.

தேர்க்கலையும் திருவாரூர் ஆழித்தேரும்

மருத்துவர் சு.நரேந்திரன், மருத்துவர் கூனியர் சுந்தரேசு

முன்னுரை

மரத்தினால் சிற்பங்கள் செய்வதும் அவற்றை மிக எழிலுடன் படைத்த தேர்களிலே பொருத்தி அழகுறச் செய்வதும் தமிழகத்தில் தொன்றுதொட்டு வந்த ஒரு அற்புதக் கலையாகும். பல காலம் செய்த பழக்கத்தால் இப்பணிகளுக்கு எவ்வகை மரங்கள் சிறந்தது என்று சிறந்த குறிப்புகளையும் வைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, பெருங்கதை என்னும் தமிழிலக்கியத்தில் தேர்கள் பற்றியும், மரத்தால் செய்யப்பெற்ற சிற்பங்கள் பற்றியும் பல குறிப்புகள் உள்ளன. பெரும்பாலான தேர்கள் உறுதியுடைய இலுப்பை மரத்தினாலும், சக்கரம் வாகை அல்லது வேங்கை மரத்தினாலும் செய்யப்படுகிறது.

தேர்வகைகள்

சங்ககாலத் தேர்கள் பொற்றேர், கொடித்தேர், நெடுந்தேர், இயல்தேர் எனப் பல்வகையில் இருந்தன போல் இன்றைய தேர்களும், 1.சகடை (மாடுகளால் இழுக்கப்படுவது - மிகச்சிறிய அடிப்பாகம் கொண்டு விமானம் எனும் அமைப்பு இல்லாத ஒன்று) 2.சட்டத்தேர் (உறுதியான நான்கு சக்கரங்களுடன் கூடிய அடிப்பாகம், மேல்பகுதி முழுவதும் சட்டங்களுடன் கூடிய அடிப்பாகம், மேல்பகுதி முழுதும் சட்டங்கள் கட்டப்பட்டு விழா நிறைவுபட்ட பின் பிரிக்கப்படுவது. 3.வைரத்தேர் (உறுதியான சக்கரங்களும், உறுதியான பெரிய அடிப்பாகமும் அதன் மேல் சிற்பங்களும் விமானத்துடன் கூடிய மேற்பகுதியில் உள்ள இக்காலத்தேர்) என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. பழமையான ஒவ்வொரு தேரிலும் ஏறக்குறைய 250 முதல் 300 வரை சிற்பங்கள் இருக்கும். இதில் இந்து கடவுளர்கள் சிற்பங்களும் புராண, தல புராண சிற்பங்களுடன் இராமாயண, மகாபாரத சிற்பங்களின் தொடர்கள் அணி செய்யும் யானை வீரர்கள், குதிரை வீரர்கள், சங்க நிதி, பதுமநிதி போன்ற சிற்பங்களும் உண்டு.

தேர்குறித்த நூல்கள்

மன்னர்கள் வலம் வருவதற்கும் போர் மேற்செல்வதற்கும் பலவகையான தேர்கள் வகுத்திருந்த போதும் கோவில் தேர்கள் அளவிலும் வடிவமைப்பிலும் மாறுபட்டவை. இதற்கான நம் முன்னோர் வடித்த கிரந்தச் சுவடி நூல்கள் மானசாரம், விசயதந்திரம் அல்லது இரதலட்சணம் ஆகியவை இந்நூல்களில் ஒவ்வொரு அங்கங்களின் அமைப்பும் அளவுகளும் விவரிக்கப்பெற்றுள்ளன. தேரின் வடிவமைப்பைக் கொண்டு ஏழுவகையாகப் பிரிக்கப்பட்டன. இவைகள் சதுரம், ஆறுபட்டை , இரண்டுதளம், மூன்றுதளம், பத்துதளம், பன்னிரண்டு தளம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அமைப்பு மரபுகள்

இத்தேர்களை இழுக்க மிக நீண்ட கயிறு வடங்கள் தேரின் அச்சுப் பகுதியோடு இணைக்கப்பெறும். இவை பெரும்பாலும் ஆறு அல்லது நான்கு வடங்களாக இருக்கும். நான்கு குதிரைகள் நான்கு வேதங்களைக் குறிக்கிறது. ஆறு வடங்கள், ஆறு அங்கங்களாகவும் தேரின் மேற்பகுதியுள்ள சட்டங்கள் கயிற்று நாண்கள்

ஆகியவற்றின் வேலைப்பாடுகள் அறுபத்து நான்கு கலைகள் தொன்னூற்றாறு தத்துவங்கள் என்ற அடிப்படையில், அதே எண்ணிக்கையில் அமைப்பது தேர்க்கொத்தர்கள் மேற்கொள்ளும் மரபாகும். மரத்தால் செய்யப்பெற்ற முக்கோண வடிவுடைய முட்டுக் கட்டைகள் நெம்புகோல் அடிப்படையில் தேர்க்கால்களை நெம்பக்கூடிய உலுக்கு மரங்கள் தேர் எளிதில் திரும்பக்கூடிய சாரடிக் கட்டைகள் ஆகியவை தேரை இயக்க உபயோகிக்கும் முக்கிய பொருள்களாகும்.

மனிதர்களின் தேராயினும் தெய்வங்களின் தேராயினும் அவற்றின் செயல்பாட்டிற்கேற்ப அதன் சக்கரங்கள் அமைக்கப்பெற்றன. போருக்குரிய தேர்களுக்கு மூன்று சக்கரங்களும் போர்விளையாட்டுப் பயிற்சிக்குரிய தேர்களுக்கு நான்கு சக்கரங்களும் தேவாலயங்களில் சாதாரண விழாவுக்குரிய தேர்களுக்கு ஐந்து சக்கரங்களும் இரத உற்சவங்களுக்கு உரிய தேர்களுக்கு ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது மற்றும் பத்து சக்கரங்களுள்ள தேர்களையும் வகுத்தனர். சிவாலயங்களில் பஞ்சமூர்த்திகளின் தேர்கள் என ஐந்து தேர்கள் பவனி வருவது மரபு. தேர் விழாக்களின்போது விநாயகர், முருகன், அம்மன், சண்டிகேசுவரர் ஆகியோரது தேர்களைப் பரமேசுவரனின் தேர் நாளுக்கு முன்னதாகவே பவனி வரச்செய்து பின்பே பெரிய தேர் இழுக்கப்படும். இத்தேர் விண்ணதிர அதிர்வேட்டுக்கள் முழங்க ஆயிரமாயிரம் அடியவர் வடம் பிடித்திழுக்க தாரை, தப்பட்டை, கொம்பு எக்காளங்கள் பேரொலி எழுப்ப பின்சக்கரங்கள் இரண்டிலும் உலக்குமரம் போட்டு உலுக்க தேர் அதிர்ந்து குலுங்கி உருண்டோடத் துவங்கும். வேகத்தைக் கட்டுப்படுத்த முட்டுக்கட்டைகளைத் தேர்க்காலின் விளிம்புகளில் கொடுப்பர்.

தமிழ்நாட்டின் பெரிய தேர் - ஆழித்தேர்

மிகத் தொன்மைக் காலத்திலிருந்து ஆரூரில் ஆழித்தேர் விழா நடைபெற்ற போதும் கி.பி. 1748இல் நிகழ்ந்த தேர் விழா பற்றிய குறிப்பு மோடி ஆவணத்தின் மூலம் கிடைத்துள்ளது. ஆண்டுதோறும் உலாவரும் தேர் 1926 ஆம் ஆண்டு தீவிபத்துக்குள்ளாகி முற்றிலுமாக அழிந்தது. அத்தேர் தற்போதைய ஆரூர் தேரைவிட மிகப் பெரியதாகும். 1928ஆம் ஆண்டு புதிய தேர் உருவாக்கும் திருப்பணி தொடங்கி 1930இல் முடிந்து புதிய தேர் ஓடியது. இதுவே தற்போதைய ஆரூர் ஆழித்தேராகும். இதுவும் பத்து சக்கரங்களோடு பழமைத் தேரை ஒத்த வடிவம் மற்றும் கூரை அமைப்புடனே வடிவமைக்கப்பட்டுள்ளது. தேரின் பீடம் பக்கத்திற்கு ஐந்து பட்டை வடிவாக மொத்தம் வேசரம் எனும் அமைப்பை ஒத்து 20 பட்டை அமைப்புடையதாக இருக்கும். இதேபோன்று தேர் கூரையும் சிகரம் வரை 20 பட்டைகள் கொண்டு விரிந்த அடிப்பகுதி கொண்டு திகழும். இதுவே மற்றைய தமிழகத் தேர்களை விட தனிச்சிறப்பு வடிவமைப்பாகும். 1930லிருந்து பின்னர் யாது காரணத்தாலோ (தேரை இழுக்க 12000 ஆட்கள் தேவை) நிலையிலேயே நின்றுவிட்டது. 1970 ஆம் ஆண்டு தமிழக முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்களின் முயற்சியால் மீண்டும் தேர் ஓடியது. இம்முறை தேர்க்கால்கள் பழுதுபட்டு இருந்தமையால் திருச்சி பாரத மிகுமின் நிறுவனம் இதனை மாற்றி இரண்டு பெரிய இரும்பு அச்சுகளில் மிக நவீன அமைப்புகளுடன் நான்கு கால்களால் ஓடும் புதிய அமைப்பினை பழைய தேரில் அமைத்தனர். இதுவே இன்றுள்ள தேரின் அமைப்பாகும். புதிய அமைப்புடன் 1975 வரை ஓடிய தேர் இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் 1978லும், அதன்பின் 1982ஆம் ஆண்டு ஒருமுறையும் தேரோட்டம் நடைபெற்றுள்ளது. அதன்பிறகு 1989இல் முதல்வர் கலைஞர் முயற்சியால் மீண்டும் 7 ஆண்டு இடைவெளிக்குப் பின்தேர் ஓடியது.

இன்றைய திருவாரூர் ஆழித்தேர் அமைப்பு

ஒவ்வொன்றும் 24 1/2 அடி நீளம் 2 அடி அகலம் 1 1/2 அடி உயரம் கொண்ட இரண்டு இருப்பு அச்சுகளில் 9 அடி விட்டமுள்ள 1 1/2 அடி அகலமுள்ள நான்கு இரும்பு சக்கரங்களின் மேல் தேர் அமைந்துள்ளது. தேரின் மரப்பகுதி நான்கு அடுக்குகளைக் கொண்டது. கீழ்ப்பகுதி 20 அடி உயரம் உள்ளது. இரண்டாவது பகுதி 4 அடி உயரம் உள்ளது. மூன்றாம் பகுதி 3 அடி உயரம் உள்ளது. இதன்மீது தான் அருள்மிகு தியாகேசர் தேர் ஏறி அமர்ந்து வலம் வருவார். இது சதுர வடிவானது. இதற்குக் கீழே உள்ள மூன்று நிலைகளில்தான் பனஞ்சப்பை கால்கள் ஒவ்வொரு மூலைக்கும் 9 கால்கள் வீதம் 36 கால்கள் பொருத்தப்பட்டும், இதற்கு அடுத்த நிலையில் ஒவ்வொரு மூலைக்கும் 5 வீதம் 20 கால்கள் செருகப்படுகின்றன. இதன்மேல் உள்ள கமல வடிவான நிலையில் நான்கு கால்கள் செருகப்படுகின்றன. இவ்வாறு நிறுத்தப்படும் 60 பனங்கால்களின் மீதுதான் தேரின் மேற்புறம் கட்டப்படும். கூடுதல் சக்தி அளிக்க 24 சவுக்கை மரங்கள் 60 அடி உயரமும் 2 அடி சுற்றளவும் கொண்டவை. நான்கு மூலைகளிலும் உச்சியிலிருந்து கீழ் மாநிலை வரை கட்டப்படும். தேரின் உள்கூடு நான்கு நிலைகளாக மரத்தேரின் மேல் 48 அடி உயரம் காட்டப்படும். அதன்மீது விமானம் போன்ற அமைப்பு மரச்சட்டங்கள் மூலம் அமைக்கப்பட்டு அதன்மீது கலசம் பொருத்தப்படும். தேர்க்கலசம் உயரம் 6 அடி. இவ்வாறாக அலங்கரிக்கப்பட்ட தேரின் உயரம் 96 அடி ஆகும். மரத்தேரின் எடைய இரும்பு அச்சுகள், சக்கரங்கள் உள்பட 200 தொன்களாகும். இதன்மீதுள்ள பனஞ்சப்பை, மூங்கில், சவுக்கு, கயிறு, துணி, முன்புறம் கட்டப்படும் குதிரை, யாளி, பிர்மா பொம்மைகள், அலங்காரத் தட்டிகள் 80 தொன். எனவே, இத்தேரின் எடை சுமாராக 300 தொன்கள் இருக்கும். தேரை இழுக்கப் பயன்படும் 4 வடங்கள் 550 அடி நீளமுள்ளன.

முட்டுக் கட்டைகள்

1 1/4 அடி உயரம் 2 1/2 அடி நீளம் 1 அடி அகலமுள்ள ஒவ்வொன்றும் 30 கிலோ முதல் 45 கிலோ வரை எடையுள்ள 450 முட்டுக்கட்டைகள் தேர் ஓட பயன்படுத்தப் படுகின்றன. சக்கரத்தின் கீழ் இக்கட்டைகள் கொடுத்த பின் தேரின் எடையால் நெறுங்கிப் போய்விடுகின்றன. ஆகவே, ஒருமுறை அல்லது இருமுறைக்கு மேல் இது பயன்படுத்த முடியவில்லை . இதுதவிர தேர் சக்கரம் தரையில் பதிந்து விடாமல் இருக்க பரப்புக் கட்டைகள் சுமார் 750 பயன்படுத்தப்படுகின்றன. தேர் நான்கு வீதிகளில் திரும்பும் இடங்களில் மிகப்பெரிய இரும்புத் தகடுகள் பரப்பப்பட்டு அவற்றின் மீது கிரீசு கொட்டப்பட்ட பின் தேர் இடப்புறம் சாக்கியால் உயர்த்தப்பட்டு சாரடிக்கட்டைகளால் தாங்கி வைக்கப்படும். பின்னர் வலது சக்கர கைராலிக் பிரேக்குகளால் பிடிக்கப்பட்டு முட்டுக் கட்டைகள் மூலம் ஓட்டம் தடை செய்யப்பட்டு பின்புறம் புல்டோசர்களால் இடிக்கப்பட்டு 90 டிகிரி கோணத்தில் திரும்பும்.

தேர்ச்சீலைகள் 450 அடி கொண்டன. இவ்வாறு மொத்தம் 17 சீலைகள், 20 அடி உயரம் கொண்ட 4 வாசல் மாலைகள், 18 அடி உயரமுள்ள 28 தொம்பைகள் இத்தேர் அழகைக் கூட்டும். திருவிழாவில் தேர் ஓட இவ்வமைப்புகளை செய்ய 10,000 ஆள்வினை நாட்கள் உழைக்க வேண்டியுள்ளது.

நன்றி : திருக்கோயில்களின் திருவிழாக்களும் தமிழர் கலைகளும்)

தமிழ் தழுவிய பரத நடனம்

பேராசிரியர் சபா.ஜெயராசா

தமிழக நாட்டார் ஆடல்களில் இருந்து படிமலர்ச்சி கொண்டு வரன் முறையான கல்வியின் செம்மைப்படுத்தலுக்கு உட்பட்ட பரத நடனம், அதிக சம்ஸ்கிருத மயப்படலின் விசைகளைப் பெற்றாலும் தமிழ் அடையாளங்கள் நிலைபேறு கொண்டுள்ளன. "இருவகைக் கூத்தின் இலக்கண மறிந்து"என்றவாறு சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் இடம்பெறும் தொடர் வரன் முறையான கற்றலுக்கு உள்ளமைந்து ஆடல் வளர்ந்தமையை ஒரு வகையிலே புலப்படுத்தும். இந்தியாவின் கல்வி வரலாற்றை நோக்கும்பொழுது. இந்திய மொழிகளில் நிகழ்ந்த வரன் முறையான கற்றல் சமஸ்கிருதமயச் செல்வாக்கினால் ஊட்டம் பெற்று வளர்ந்தமையைக் காணமுடியும்.

தமிழ் மரபில் இசைநடன நூல்கள் பல வழக்கிலிருந்தும், மறைந்துமுள்ளன. வரலாற்றுத் தொடர்ச்சியில் தப்பி நீடித்த நூல்களும் இருக்கின்றன. பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், கூத்தநூல், செயிற்றியம், இசை நுணக்கம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், இந்திரகளியம் முதலானவை தமிழ் மரபில் எழுந்த இசை நடன நூல்கள் சிலவாகும். பிற்காலத்தில் புலமை நிலையில் பரதநடனத்துக்குரிய கருத்தியல் பின்னணியையும் ஆற்றுகைப் பின்னணியையும் வழங்கியோர் நாட்டிய சாஸ்திரம், அபிநயதர்ப்பணம் முதலியவற்றை ஆதார நூல்களாக்கினர். இவை பரதநடனத்துக்கு மட்டுமுரிய மூலநூல்கள் அன்று.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவின் பரதமுனிவரால் எழுதப்பெற்ற நாட்டிய மரபுகள் அனைத்தையும் தொகுத்துக் கூறும் "அனைத்தையும் உள்ளடக்கிய" (Comprehensive) ஆக்கமாக விளங்குகின்றது. அது பரதநடனத்துக்கு மட்டுமுரிய மூலநூல் அன்று. அவ்வாறே நந்திகேஸ்வரால் எழுதப்பெற்ற அபிநயதர்ப்பணமும் பரதநடனத்துக்கு மட்டுமுரிய மூலநூல் அன்று. இந்தியப் பெருநிலப்பரப்பின் பல தொல்சீர் நடனங்கள் அந்நூல்களோடு இடையுறவு கொண்டுள்ளன.

தமிழக வரலாற்றிலே படிப்படியாக நிகழ்ந்து வந்த பண்பாட்டு விசைகள், கர்நாடக சங்கீதம், பரதநடனம் முதலிய தொல்சீர் வடிவங்கள் மீது தீவிர சமஸ்கிருதமயமாக்கலையும், தெலுங்கு மயமாக்கலையும் ஏற்படுத்தின. இவை ஒரு வகையில் மேலுயர்ந்தோர் (Elite) பாரம்பரியங்களுடன் இணைந்து வளரலாயின. ஆனால் நாட்டுக் கூத்துக்கள் சாமானியர்களின் ஆடல் வடிவங்களாக, தமிழ்மொழி மயப்பட்டு நின்றன. பிற்காலத்தில் இந்த முரண்பாடுகள் மேலும் தலைதூக்கலாயின. பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கம் ஒருவகையில் ஒடுக்க முறைக்கு எதிரான விசையாக எழுந்தது என்று கூறுதலும் தவறாகாது.

பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியில் விஜயநகரப் பேரரசு ஆந்திராவின் துங்கபத்திரை முதல் தமிழகத்தின் கன்யாகுமரி வரை பரந்திருந்தது. கிருஷ்ணதேவராயரது இறுதி ஆண்டுகளில் தமிழகத்தில் நாயக்க மன்னர் ஆட்சி

நிலவியது. தஞ்சையையும், மதுரையையும், செஞ்சியையும் தலைநகரங்களாகக் கொண்டு கி.பி 1530 முதல் கி.பி 1676 வரை நீடித்த அவர்களது ஆட்சியில் தமிழகத்தின் தொல்சீர் கலை வடிவங்களிலே சமஸ்கிருதம் மற்றும் தெலுங்கு மொழிகளின் செல்வாக்குகள் தீவிரமாக ஊடுருவத் தொடங்கின. அப்பையா தீட்சிதர், கோவிந்த தீட்சிதர், ரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர், வேங்கடமுகி முதலியோர் தெலுங்கு மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் பல இசை நடன நூலாக்கங்களிலே ஈடுபட்டனர்.

நாயக்க மன்னர் ஆட்சியைத் தொடர்ந்து தஞ்சையில் மராட்டிய மன்னர் ஆட்சி கி.பி 1676 முதல் 1855 வரை நிகழ்ந்தது. இக்காலப்பகுதியில் பரதநடனத்தில் சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி ஆகிய மொழிகளின் செல்வாக்குகள் பதிவுறத் தொடங்கின.

முதலாம் ஏகோஜி மன்னரின் குமாரனாகிய சகஜி மன்னன் பிரபந்தங்கள், பதங்கள், இராலட்சண விளக்கங்கள் கொண்ட இருபத்து இரண்டு நூல்களை எழுதினார். அபிநவபோஜன் என்ற பட்டமும் அவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. பக்திப் பதங்கள், பாவப் பதங்கள், வைராக்கிய பதங்கள், சிருங்காரப் பதங்கள், ஹாஸ்ய பதங்கள் என்ற பிரிவுகளில் பல்வேறு பதங்களை இவர் இயற்றினார். இரண்டாம் ஏகோஜி மன்னரும் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் நிருத்தியப் பதங்கள், சிருங்காரப் பதங்கள், பக்திக் கீர்த்தனைகள் முதலியவற்றை எழுதினார்.

தஞ்சையை ஆண்ட இரண்டாம் துளஜா மன்னர் தெலுங்கு மொழியிலும் தமிழ் மொழியிலும் வர்ணங்களும், கீர்த்தனைகளும் இயற்றினார். பரதநடனத்திலே சிறப்புற்று விளங்கிய மகாதேவ அண்ணாவியாரும் வனஜாட்சி, முத்து மன்னார் ஆகிய பரத நடன வல்லுனர்களும் இவரது ஆட்சியில் அரச ஆதரவைப் பெற்றுச் சிறப்புற்றிருந்தனர். இக்காலத்தில் பரத நடன ஆசான்களாக விளங்கிய கங்கை முத்து, சுப்பராயன் சகோதரர்களும் அரச ஆதரவைப் பெற்று பரதநடன வளர்ச்சியில் பங்கேற்றனர். சுப்பராயனின் பிள்ளைகளாகிய சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோர் பரத நடனக் கச்சேரி அமைப்பைக் கோவைப்படுத்தினர்.

திருநெல்வேலியில் வசித்துவந்த மகாதேவ அண்ணாவியார் மரபுக் கூத்துக்களில் வல்லவராக விளங்கியவர் என்பதும், இரண்டாம் துளஜா மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் செம்மைப்படுத்தலுக்கு உட்பட்ட பரத நடன முறைமைக்குள் சென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இவ்வாறான ஒரு பெயர்ச்சி பிற்காலத்தில் யாழ்ப்பாண வரலாற்றிலும் காணப் பட்டமை ஒப்புமைக்குரியது. கிராமிய நடனங்களிலே சிறந்து விளங்கிய இணுவை ஏரம்பு அண்ணாவியார் கிராமிய ஆடல் தளங்களிலும், கூத்து முறைமைகளில் இருந்து பரத நடன ஆற்றுகை முறைமைக்குள் பெயர்ந்த அசைவியம் குறிப்பிட்டுக் கூறக்கூடியது. இந்தத் தளங்களின் சங்கமும் சிறப்பும் அவரது மகன் கலைச்செல்வர் சுப்பையா அவர்களிடம் பளிச்சீடு கொண்டன)

சரபோஜி மன்னர் காலத்தில் பரத நடனத்தில் பதினெட்டு வகையான உருப்படிகள் இனங்கண்டு தெளியப்பட்டன. இவற்றில் சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டியம், முதலாம் மொழிகளின் ஆட்சி விரவியிருந்தது.

அந்த உருப்படிகள் வாழையடி வாழையாக வளர்ந்து வந்த தமிழ் மரபு ஆடல்களின் தளத்தில் மராட்டிய ஆடல் வடிவங்களையும் உள்ளமைத்து வளர்ந்தன. தமிழ்ச் சடங்கு மரபில் இறைவனை அழைத்து வழிபடும் 'அழைப்பு', மராட்டியச் சாயல் பெற்று அலாரு, அலாரிப்பு ஆயிற்று. தமிழர் மரபில் இடம்பெற்ற அகப்பொருள் தழுவிய ஆடல் அமைப்பு பதம் என்ற பாடல் வடிவத்தையும் ஆடல் வடிவத்தையும் பெற்றது. பரத நடனத்தில் ஆடுபவர் தம்மை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் பாவித்து ஆடும் பதம் வளரலாயிற்று.

இன்னொரு கண்ணோட்டத்தில் இதனை விளக்குவதனால் தமிழர்களது மரபுவழி ஆடல்கள் வளச்சடங்குகளுடன் இணைந்த நிலையில், வளப்பெருக்கின் மூலகாரணம் இறைவன் என்பதால் இறைவனே ஆடல் இலக்கின் தலைவனாக அமைந்தான். தக்கேசி, கௌசிகம், பழம்பஞ்சுரம், சாதாரி, காந்தார பஞ்சமம், சீகாமரம் முதலிய பண்கள் இறையியற் காதலைப் புனைவதற்குப் பயன்படுத்தப்பட்டன. கர்நாடக இசைக்கும் பரத நடனத்துக்கும் உள்ள உறவு வலிமை பெறத்தொடங்க பதங்களில் ரக்தி இராகங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற கட்டளை தோன்றியது.

சரபோஜி மன்னர் தஞ்சையிலே ஆட்சி செய்த காலத்தில் வாழ்ந்த சொண்டி வேங்கடரமணையா, கவும்கிருஷ்ணையர் ஆனை ஐயா, வேதநாயகம் சாஸ்திரியார், தியாகராஜர், முத்து சுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள், கவிவேங்கடசூரி, வேங்கட சுப்பையர் முதலியோர் தெலுங்கிலும், சமஸ்கிருதத்திலும் எழுதிய கீர்த்தனைகளும், கர்நாடக இசைப் பங்களிப்புக்களும் பரதநடனத்தில் நேரடியான செல்வாக்குச் செலுத்தின. சரணு சரணு, கவுத்தம், ஜாவளி, முலாம் உருப்படிகள் பரத நடனத்தில் இடம்பெறலாயின.

கர்நாடக இசையின் மிகையான செல்வாக்கு பரதநடனத்தில் இடம்பெற்றமைக்கு வர்ண உருப்படி சிறந்த எடுத்துக்காட்டு. வர்ணத்தில் கவிதைச் சொற்கள் மிகக் குறைவாகவே காணப்படும். வர்ண அமைப்பின் முதற்பகுதியில் பல்லவி, அனுபல்லவி, முத்தாயிசுரம் முதலிய உறுப்புக்கள் அமைந்திருக்கும். பிற் பகுதியில் சரணம் மற்றும் சரணசுரங்கள் இடம்பெற்றிருக்கும். பதவர்ணம், தானவர்ணம் என்றவாறு பதங்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கும். பதவர்ணங்களில் எல்லா உறுப்புக்களுக்கும் சாகித்தியம் அமைக்கப்பட்டிருக்கும். பதவர்ணங்களே பரதநடனக் கச்சேரி அமைப்பின், மிகப்பெரிய கட்டுமானக் கூறாக அமைக்கப்பட்டது.

தமிழர்களின் பக்தி மரபுப்பாடல்களின் அமைப்பிலிருந்து கீர்த்தனை வடிவம் தோன்றியமைக்குரிய இணைப்பு ஆதாரங்கள் பலவற்றைக் காணலாம். கீர்த்தனையின் முதல் உறுப்பாகிய பல்லவி மீண்டும் மீண்டும் பாடப்பெறுதல் குறிப்பிடத்தக்கது. தமது உணர்வுகளை மீள வலியுறுத்த நாயன்மார்களும்

ஆழ்வார்களும் மீளியக்கும் அடிகளைப் பயன்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக ஆண்டாள் தமது இறை சார்ந்த காதலைப் புலப்படுத்த "கனாக்கண்டேன் தோழி நான்" என்பதை ஒவ்வொரு பாசுரத்திலும் அமைத்துள்ளமையைக் காணலாம்.

கீர்த்தனையின் உறுப்புக்களாகிய பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகியவை எடுத்துக்கொண்டதான வேறுபாடுகளுக்கு ஏற்ப பல்வேறு காலஅளவிற் பாடப்படுதலும், நாயன்மார்களது பதிக முறைமையோடு கொண்ட தொடர்பை ஒருவகையிலே புலப்படுத்தும், பதிகங்களில் அமைந்துள்ள பத்துப்பாடல்களைப் பாடும் பொழுது முதற்பாடலை சமானிய அலகில் பாடும் மரபு உண்டு. கீர்த்தனையிலும் பல்லவியைப் பெரும்பாலும் மத்தியஸ்தாயி அமைப்பிலே பாடுதல் உண்டு. இந்த ஒப்புமை மேலும் ஆய்வுக்குரிய பொருளாக அமைந்துள்ளது.

கீர்த்தனை அமைப்பை முதன் முதலாகப் பயன்படுத்தியவர் முத்துத்தாண்டவர். இவர் பதினாறாம் நூற்றண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றார். தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகியோருக்கு இவர் முற்பட்டவர். முத்துத்தாண்டவர் இயற்றிய "பூலோக கயிலாச கிரி சிதம்பரம்", "கண்டபின் கண்குளிர்ந்தேன்", "ஆடிய வேடிக்கை பாரீர்" முதலிய தொடக்கங்களைக் கொண்ட கீர்தனைகள் பரதநடன ஆற்றுகைக்கு வளர்ந்தன. ஆடிய வேலடிக்கை பாரீர் என்ற கீர்தத்தனையில் வரும் சரணங்கள் பரத நடனத்துக்கு மிகவும் பொருத்தமாக அமைந்தன. தஞ்சை நால்வருள் ஒருவராகிய பொன்னையாபிள்ளை அவர்கள் பரத நடனம் கற்றலுக்குரிய வரன்முறையான பயிற்சிகளை ஒழுங்கமைத்தார். அவர் ஒழுங்கமைத்த தொடக்கநிலைப் பாடங்களாகிய பத்து அடைவுகளை அமைத்தார். பத்து அடைவுகள் ஒவ்வொன்றிற்கும் பன்னிரண்டு உட்பிரிவுகள் அமைக்கப்பட்டு மொத்தம் நூற்று இருபது அடைவு அசைவுகள் ஏற்படுத்தப்பட்டன. பரத நடன அசைவுகளின் அடிப்படை அலகுகளே அடைவுகளாகும். தமிழர்களிள் மரபுவழிக் கூத்துக்களிலிருந்து படிமலர்ச்சி கொண்ட செம்மைப்படுத்தப்பட்ட அசைவு அலகுகளாக அவை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் தழுவிய பரதநடன வளர்ச்சிக்குரிய பங்களிப்புக்களைச் செய்தவர்களுள் கி.பி.1711 ஆம் ஆண்டு பிறந்த அருணாசலக் கவிராயரது பங்களிப்பு விதந்து குறிப்பிடத்தக்கது. இவர் எழுதிய இராம நாடகக் கீர்த்தனைகள் தமிழில் எழுந்த முதலாவது இசைநாடக நூலாகும். இந்நூலில் இடம்பெற்றுள்ள 258 இசைப் பாடல்கள் பரதநடன ஆடல்களுக்கும் பொருத்தமாக அமைந்தன. அவர் எழுதிய "ஏன் பள்ளி கொண்டீரையா சீரங்க நாதரே" என்று தொடங்கும் கீர்த்தனையின் சரணத்தில் இராமாயணக் கதை முழுவதும் கூறப்பட்டிருத்தல் பரத நடன எடுத்தாள்கைக்கு ஏற்புடையதாக அமைந்தது.

தமிழ் தழுவிய பரத நடன வளர்ச்சிக்குரிய கீர்த்தனைகளைத் தந்தவர்களுள் கோபாலகிருஷ்ண பாரதியார் விதந்து குறிப்பிடத்தக்கவர். இந்துஸ்தானி இசையிலும் இவருக்கிருந்த ஆற்றல் காரணமாக அந்த இராக வடிவங்களையும் பயன்படுத்தினார். இசைக்கவி முத்துத்தாண்டவர் போன்று இவரும் தாளச் சொற்கட்டுக்களைத் தமது

கீர்த்தனைகளில் அமைத்தமை பரத நடனத்துக்கு வளஞ்சேர்ப்பதாக அமைந்தது. 'சிதம்பரம் போகாமல்' 'சிவலோக நாதனைக்கண்டு' 'பித்தம் தெளிய' 'ஆடும் சிதம்பரமே' 'ஐயே மெத்தக் கடினம்' 'நடனமாடினார்' 'வருகலாமோ' 'எந்த நேரமுமுந்தன்' 'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா' முதலிய இவரது பாடல்கள் பரத நடனத்துக்குரிய தனித்துவ அடையாளங்களைப் பதிவுசெய்பவையாகவுள்ளன.

பரத நடனத்தை வளம்படுத்துவதற்குரிய கீர்த்தனைகள், பதங்கள் இயற்றியவர்களுள் மாரிமுத்தாப்பிள்ளை தனித்துவமானவர், இவர் இயற்றிய கீர்த்தனைகளும், அவற்றில் இடம்பெற்றுள்ள சரணங்களும் பரத நடனத்துக்குரிய ஆற்றுகை வடிவங்களை வளம் படுத்துவதற்குத் துணை நிற்கின்றன. "காலைத்தூக்கி நின்றாடுந் தெய்வமேயெனைக் கைதூக்கியாள் தெய்வமே" என்ற கீர்த்தனை சிவனது ஆடலின் பரிமாணங்களை ஆடல் மொழிப்படுத்த பொருத்தமாக அமைந்துள்ளன.

கனம் கிருஷ்னையர், ஊத்துக்காடு வேங்கடசுப்பையர் முதலியோர் இயற்றிய பதங்கள் தமிழ் தழுவிய பரத நடனத்தின் வளர்ச்சிக்கு நேரடியான பங்களிப்பைச் செலுத்தின. ஊத்துக் காடு வெங்கட சுப்பையா இயற்றிய "தாயே யசோதா" "அலை பாயுதே" முதலாம் ஆக்கங்கள் கண்ணபிரானின் குறும்புகளைப் பரத நடனத்தில் அமைப்பதற்குரிய அழகுப் பரிமாணங்களைக் கொண்டுள்ளன. இவரது பதங்களில் அமைந்துள்ள சொற்கட்டுக்களும், சுரங்களும் பரத நடன அமைப்புக்குரிய பரிமாணங்களுக்கு வலுவூட்டுகின்றன.

கவிகுஞ்சர பாரதி, வைத்தீஸ்வரன் கோவில் சுப்பராமய்யர், இராமலிங்க சுவாமிகள், வாசுதேவகவி, சுப்பிரமணிய பாரதியார் முதலியோர் இயற்றிய தமிழ் உருப்படிகளும் பரத நடனத்துக்கு வளமூட்டி வருகின்றன. பரதநடனத்தை அடியொற்றி நாட்டிய நாடகங்கள் வளர்ச்சியுற்ற வேளை குறவஞ்சி உள்ளடக்கத்தைக் கொண்ட கீர்த்தனை வடிவிலான பாடல்களும், பதங்களும் தமிழில் ஆக்கம் பெற்றன. திருக்குற்றாலக் குறவஞ்சி புகழ்பெற்ற நாட்டிய நாடகமாக மலர்ந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பக்கவிளைவுகள் நிலப் பிரபுத்துவ இழிவு நிலையிலிருந்த பரதநடன மீட்சிக்கு வழியமைத்ததுடன் மேலோங்கியோருக்குரிய கலையாகவும் ஆக்கப் பெற்றது. தமிழகத்தின் மேலோங்கியோர் பரத நடனத்தை சமஸ்கிருதமயப்படுத்தலிலும் தீவிர ஈடுபாடு காட்டினர். இந்திய சுதந்திரப் போராட்டம் தமிழகத்தில் ஏற்படுத்திய பிறிதொரு பக்கவிளைவாக தனித்தமிழ் இயக்கம் வளர்ச்சியுறலாயிற்று. 1941ஆம் ஆண்டில் ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழிசை இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். இசைக் குறியீட்டுடனும் தாளக் குறிப்புகளுடனும் நூல்களை வெளியிடும் முயற்சியை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டது. 1949ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழிசைச் சங்கம் பண் ஆராய்ச்சிகளுக்கு வழிவகுத்தது. தமிழ் தழுவிய நாட்டிய நாடகங்களை மேடையேற்றவும் தமிழிசைச் சங்கம் துணைநின்றது.

சுத்தானந்த பாரதியார், தி. இலக்குமணப்பிள்ளை , சங்கராஸ் சுவாமிகள், மதுரை மாரியப்ப சுவாமிகள், கோடீஸ்வர ஐயர், தண்டபாணி தேசிகர், பாபநாசம் சிவன், பெரியசாமித்தூரன், முத்தையா பாகவதர், கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை முதலியோர் பரத நடன ஆக்கத்துக்குரிய தமிழ் உருப்படிகளைப் புனைந்துள்ளனர்.

தமிழ் மொழியில் மிகப்பெருந்தொகையான பதம், வர்ணம், கீர்த்தனம், தில்லானா மற்றும் நாட்டிய நாடகங்களைப் புனைந்தும், பரதநடன ஆக்கம் செய்தும் பரதநடனத்தின் தமிழ் அடையாளத்தை உலகெங்கும் பரப்பிய பெருமைக்குரியவராக அமரத்துவம் எய்திய மகாவித்துவான் இணுவில் வீரமணிஐயர் விளங்குகின்றார். இவர் எழுதிய அளவுக்கு மிகப் பெருந் தொகையான பரத நடன உருப்படிகளை வேறுயாரும் எழுதியிலர். ருக்மணி அம்மையாரிடம் கலாஷேத்திரத்தில் பரத நடனத்தை வரன் முறையாகப் பயின்றும் பாவநாசம் சிவனிடத்து இசை நுட்பங்களைத் தெளிவுறக் கற்றும் தமிழ் தழுவிய பரதநடனத்தின் வளர்ச்சியில் ஐயர் அவர்கள் வினையாற்றலுடன் பங்கேற்றார்.

ஆற்றுகை நிலையில் தமிழ் தழுவி பரதநடனத்தை வளர்த்த பெருமைக் குரியவர்கள் வரிசையில் இலங்கையில் கீதாஞ்சலி க. நல்லையா, கலைச்செல்வர் ஏரம்பு சுப்பையா, மகாவித்துவான் வீரமணிஐயர், திருமதி லீலா செல்வராசா, வித்துவான் ய. தொம்மைக்குட்டி, வி. இராஜரத்தினம், திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம், திருமதி சண்முகப்பிள்ளை முதலிய முன்னோடிகளின் பணிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசை, நடனத் துறைகளின் பணிகளும் விதந்து குறிப்பிடப்பட வேண்டியுள்ளன. இன்று உலகெங்கும் பரந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது பண்பாட்டு அடையாளத்தைப் பராமரிப்பதற்குப் பரத நடனத்தைப் பற்றிப் பிடிக்கின்றனர்.

(நன்றி : ஆடற்கலை)

கீதம் இனிய குயிலே! கேட்டியேல், எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின், பாதாளம் ஏழினுக்கு அப்பால்
சோதி மணிமுடி செல்லின், சொல் இறந்து நின்ற தொன்மை
ஆதி, குணம் ஒன்றும் இல்லான், அந்தம் இலான் வரக் கூவாய்

ஏர் தரும் ஏழ் உலகு ஏத்த, எவ் உருவும் தன்உரு ஆய்,
ஆர்கலி சூழ் தென்இலங்கை, அழகு அமர் வண்டோதரிக்குப்
பேர் அருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானை
சீரிய வாயால், குயிலே! தென் பாண்டி நாடனைக் கூவாய்

தேன் பழச் சோலை பயிலும் சிறுகுயிலே! இது கேள் நீ,
வான் பழித்து, இம்மண் புகுந்து, மனிதரை ஆட்கொண்டவள்ளல்
ஊன் பழித்து, உள்ளம் புகுந்து, என் உணர்வு அது ஆய ஒருத்தன்
மான் பழித்து ஆண்ட மென் நோக்கி மணாளனை நீ வரக் கூவாய்!

(திருவாசகம் - குயில்பத்து)

சிறுவர் விருந்து

சிபிச் சக்கரவர்த்தி

சைவப்பெரியார் கூ.சிவயாதசுந்தரம்

சிபி என்றொரு சக்கரவர்த்தி இருந்தார். ஒருநாட் பின்னேரம் அவர் தம்முடைய முதன் மந்திரியோடு அரண்மனை வாயிலில் நின்றார். அப்போது ஒரு மறவன் புறாவொன்றைக் கையிலே கொண்டு போனான். சிபிச்சக்கரவர்த்தி அவனையழைத்து, "இந்தப் புறா விற்கவா? வளர்க்கவா? கொன்று உண்ணவா?" என்று கேட்டார்.

"மறவர்கள் பிடிக்கிற பறவைகளை, விற்பதுமில்லை, வளர்ப்பதுமில்லை" என்று அவன் சொன்னான். அப்போது இராசா மறவனைப் பார்த்து "நீ அதைக் கொல்லலாமா? அதுவும் உன்னைப்போல ஒரு சீவன் தானே, உனக்கு ஒரு முள்ளுத் தைத்தால் நீ எவ்வளவு வருத்தப்படுகிறாய்? நீ அதைக் கொல்வது சரியா? கொல்லாமல் அதைப் பறக்கவிடு" என்றார்.

அப்போது மறவன் "மகாராசாவே, உங்களுடைய சொல்லை நான் தட்டத் தக்கவனல்லேன். எனக்கு இந்த நியாயங்கள் ஒன்றும் வேண்டாம். இப்போது இதைப் பறக்கவிட்டால், நான் இன்றைக்கு உண்ணாமற் பசி கிடக்க வேண்டி வருமே. அது தங்களுக்கு நீதியா?" என்றான்.

இராசா, "உனக்குச் சோறு தருவேன்" என்று சொன்னார். மறவன், தான் "சோறாவது காய்கறிகளாவது ஒருபோதும் உண்பதில்லை" என்றார். அவன் சோற்றையே உண்ண வேண்டும் என்றும், பறவைகளை உண்பது பாவம் என்றும் இராசா சொன்னார். "எதுவாயிருந்தாலும் நான் ஒரு காலமும் உண்ணாத உணவை உண்ணப் போகிறதில்லை" என்று மறவன் பிடிவாதமாய் நின்றான். இராசா சற்றுநேரம் யோசித்து விட்டு மறவனைப் பார்த்து, "உனக்கு நான் இறைச்சி தருவதானால், ஏதாயினும் ஒரு பிராணியைக் கொல்லல் வேண்டும். நான் ஒரு சீவனையும் கொல்லமாட்டேன். இந்தப் புறா அளவு கனமுள்ள தசை எனது சரீரத்திலிருந்து வெட்டித் தருகிறேன்" என்று சொன்னார்.

அதற்கு மறவன் சம்மதிக்க, அவர் ஒரு தராசு கொண்டு வரும்படி மந்திரியிடம் கட்டளை செய்தார். மந்திரி மறவனை மிகவுங் கோபித்துப் பார்த்துவிட்டுப் போய் ஒரு தராசு கொண்டு வந்தான். இராசா அந்தப் புறாவைக் கட்டி ஒரு தட்டிலே வைத்துவிட்டு, தமது தொடையிலிருந்து ஒரு பெரிய துண்டுத் தசையை வெட்டி மற்றத் தட்டிலே இட்டார். வெட்டிய தசை போதவில்லை. இராசா பின்னும் ஒரு துண்டு தசையை வெட்டித் தட்டிலே இட்டார். அதுவும் போதவில்லை, புறாவினுடைய பாரம் மிக அதிகமாய் இருந்தது; "இது என்ன ஆச்சரியம்!" என்று நினைத்துக் கொண்டு பின்னும் ஒரு துண்டு வெட்டித் தட்டிலே இட்டார்; பின்னும் போதவில்லை; உடலிலிருந்து தசையை வெட்ட வெட்ட இரத்தம் அதிகமாகப் பாய்ந்தது; இராசாவுக்குக் களை உண்டானது; பின்னும் அவர் ஒரு துண்டு வெட்டுவதற்குக் கையையெடுத்தார்.

அப்போது, அங்கு நின்ற மறவனைக் காணவில்லை. "சிபிச் சக்கரவர்த்தியே, பொறு! பொறு! இவ்வளவும் போதும்; உனது சரீரம் முன் போலாகுக; நான் படைத்த உயிர்களிலே நீ அதிக அன்புள்ளவனாய் இருப்பதால், நான் உன்னை விரைவாக என்னோடு சேர்த்துக் கொள்ளுவேன்; இன்னுஞ் சொற்ப காலத்தில் நீ என்னுடைய பாதத்தை அடைவாய்" என்று ஓர் அசரீரி வாக்குப் பிறந்தது; சிபியினுடைய சரீரம் முன் போலானது. "மறவனாக வந்தவர் சிவபெருமானே" என்று சிபி உணர்ந்து அவரைத் தோத்திரஞ் செய்தார்.

(நன்றி : சைவபோதம் – முதற் புத்தகம்)

நினைவலைகள்

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம்

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் வரலாற்றுப் பதிவாகி இருப்பதுடன், இன்றும் அதுபற்றி சிறப்பாகப் பேசப்பட்டு வருகிறது. இவரது இலங்கை விஜயம் தொடர்பான சில மேலதிக தகவல்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

சுவாமி விவேகானந்தர் 1897 ஜனவரி 15ஆம் திகதி மாலை 6.00 மணியளவில் மேல்நாட்டுச் சீடர்கள் சிலருடன் கொழும்புத் துறைமுகம் வந்து சேர்ந்தார். இலங்கை சட்டமன்ற உறுப்பினர்களாகவிருந்த திரு.பி.குமாரசாமி, திரு.பி.அருணாசலம் ஆகியோர் வரவேற்புக்குழு அமைத்து, சுவாமி விவேகானந்தரை வரவேற்றார்கள்.

சுவாமி விவேகானந்தர் ஜனவரி 16ஆம் திகதி கொழும்பு நகர மண்டபத்தில் 'இந்திய பூமி' என்ற தலைப்பில் உரையாற்றினார். மறுநாள் 17ஆம் திகதியன்று காலை மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. அதேதினம் மாலை கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் தரிசனம். 18ஆம் திகதி காலை திரு.செல்லையா என்பவரது வீட்டிற்கு விஜயம் செய்துள்ளார். அங்கு பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் வழங்கியுள்ளார். அதே தினம் மாலை கொழும்பு பொது மண்டபத்தில் 'வேதாந்த தத்துவம்' என்ற தலைப்பில் உரையாற்றியுள்ளார்.

ஜனவரி 19ஆம் திகதியன்று விசேட புகையிரதத்தில் கண்டிக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அருணாசலம் அவர்களும் இவருடன் சென்றுள்ளார். கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வின்போது மக்கள் சார்பாக திரு.தில்லையம்பலம் முகாந்திரம் வரவேற்புரை ஆற்றினார். சுவாமி விவேகானந்தர் ஆசியுரை வழங்கியிருந்தார். அன்று மாலை கண்டியிலிருந்து மாத்தளைக்கு பயணமானார்.

சுவாமி விவேகானந்தர் ஜனவரி 20ஆம் திகதியன்று அனுராதபுரம் போதி மரத்தடியில் நடந்த நிகழ்வின்போது விசேட உரையொன்றை ஆற்றியுள்ளார். இது சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்தார். நாவற்குழியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். மறுநாள் யாழ். இந்துக் கல்லூரியில் 'வேதாந்தம்' என்ற தலைப்பில் உரையாற்றியிருக்கிறார்.

ஈழம்சிவ பூமியென்று பாடும்தினம் பாடும் !

கூ.குகதேவன்

ஈழம்சிவ பூமியென்று பாடும்தினம் பாடும்
இனியதமிழ் சைவவொளி நாற்றிசையும் கூடும்
வாழவழி காட்டும்சைவப் பண்பாடும் பேசும்
வாகுறவே நாற்றிசையும் தமிழ்வேதம் பாடும்

ஆதிமுத லரசிருந்த தமிழ்மாட்சி பாடும்
அரஹர சிவவெனவே பாடும்தினம் பாடும்
பாதிமதி நதிசடையோன் பண்பாடும் பாடும்
பார்பதியாள் நயினைமணித் தாயின்புகழ் பாடும்

ஈச்சரங்கள் நாற்றிசையும் எழுந்தநிலை பாடும்
இனியதமிழ் வேதம்திரு வாசகமும் பாடும்
பூச்சரங்கள் பற்பலவும் ஆக்கும்திறன் ஓங்கும்
புனிதமிகு கலைகள்பல தோன்றியெழில் கூட்டும்

நாகவழி பாட்டினுக்கே முதன்மைதந்த காலம்
நாமறியா எம்தமிழர் நாகர்புகழ் பாடும்
அகம்மகிழ ஆதிகே தீச்சரமும் பாடும்
ஆதிநாகர் பண்பாட்டின் எழில்வண்ணம் பேசும்

வேடர்குடி தான்தொழுத மேன்மையும்பண் பாடும்
மேலான கதிர்காமக் கந்தன்புகழ் பாடும்
உடனழகு கூட்டும்மண்டூர் சந்நிதியும் பாடும்
உளம்மகிழும் மௌனபூசை கண்டுகளி கூறும்

சிவனோடும் கணபதியின் புகழ்பாடும் பாடும்
சிந்தையிலே இருவரையும் நினைந்துகரம் கூப்பும்
தவமெனவே லிங்கவடி வானசிவன் மீது
தந்திமுகன் ஐங்கரனின் கவசமெழில் கூட்டும்

எத்திசையும் எம்சைவ மாட்சியதே பேசும்
என்றென்றும் எம்பெருமை பாடும்சிவ பூமி
நித்தமெழில் பாடும்சைவ பண்பாடும் பாடும்
நீலமணி மிடற்றழகன் புகழினையே பாடும்

கண்ணைக் கோதிக் காக்கைப்பிள்ளை யார்புகழைப் பாடும்
கண்நுதலான் தன்கருணைத் திறமதுவே பாடும்
எண்ணமெல்லாம் அவனடியில் இட்டழகு கூட்டும்
ஏகதந்தன் கணபதியின் அருள் மகிமை பாடும்!

துர்க்காபுரம் மகளிர் இல்லம்
37ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் (07.04.2019)





இந்த சஞ்சிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது. (பங்குனி ~ சித்திரை ~ 2019)